# விளம்பரம்™

**VLAMBARAM™**

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

தி 12 JUNE 15, 2002 பாலம் 12




தொலைக்கக்கூடாத அந்த ஒன்று

வாசியுங்கள்

உலக தமிழோசை

காலாண்டு சஞ்சிகை

தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## ஜப்பானில் சப்பறோ என்ற நகரில் அமைக்கப்பட்டுள்ள புதுமையான Hiroba விளையாட்டரங்கு.

**ஆசியாவில் முதன் முதலில் நடைபெறும் உலகஉதைபந்தாட்டப் போட்டியில் சாதனைகளில் ஒன்று**


**(பக்கம் - 2)**


## உன்னை அறிந்தால்

***"என்று மாறும் இந்த நிலைமை".***

கடந்த வார இறுதியில் ஒரு திருமண வீட்டிற்கும், அறிஞரின் பாராட்டு வைபவத்திற்கும் சென்றிருக்க வாய்ப்பு கிடைத்தது. நீண்ட இடைவெளியின் பின் எனக்கு இச்சந்தர்ப்பம் ஏற்பட்டு இருந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்னுடைய சொந்தத் தேவைகளிற்காக செல்ல வேண்டியும் இருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு சென்றுவிட்டேன். இரண்டு நிகழ்ச்சிகளும் குறிப்பிட்ட நேரத்தைத் கடந்து ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகே ஆரம்பமானது. எனது நண்பர் ஒருவர் இரண்டாவது நிகழ்ச்சக்கு வந்திருந்தார். அவர் இரண்டு மணிநேரம் தாண்டியே வந்திருந்தார். அவரிடம் வினவியபோது.... நம்மவர்களில் அனேகர், இவ்வாறே காலம் தாழ்த்தியே தொடங்குவது இயல்பு.

இதனால்தான், தான் இப்படி வந்தேன் என்றார்.... யாரிடம் சொல்வது.


தமிழ் மக்களிற்கு என்று ஒரு நேரப் பலகை தயாரிப்பது தேவைதான்....

இதற்கு விதிவிலக்குள் இருப்பதை நாம் மறப்பதற்கும், மறுப்பதற்கும் இல்லை. எம்முடைய எண்ணங்களை, மகிழ்ச்சிகளை, ஆசைகளை, அபிலாசைகளை, முகவிம்பங்களை, போலித் தோற்றங்களை மதிக்க விரும்பும் நாம், ஏன், மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிக்க மறக்கிறோம்.

***நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!***

**-நெற்றிக்கண்ணன**


RE/MAX Above the Crowd!



வீடு விற்க, வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**
(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!


## அருள் விருந்து

* காற்றுக்கு எதிரே வீசிய தூசிகள்தன் கண்ணிலேயே வந்து படிகின்றன. சான்றோர் மீது செலுத்திய துன்பங்கள் அவைகளைச் செலுத்தியவனையே அதிவேகமாக வந்து தாக்குகின்றன.

* செருக்கையும் பொறாமையையும் ஒழித்துவிடு. பிறருடன் ஒத்திருந்து பொது நன்மைக்கு உழைக்கக் கற்றுக் கொள்ள. நம் நாட்டுக்கு இத்தகைய தொண்டர் தேவை.

* உலகில் எதையும் உன்னுடையது என்று தனி உரிமை பாராட்டாதே. தனி உரிமை பாராட்டும் பொழுதெல்லாம் இயற்கையின் கண் நீ மொத்திண்கின்றாய். உரிமையை ஒழித்து விடும்படி இயற்கையானது அடிமேல் அடி அடித்துப் பாடம் புகட்டுகிறது.

- செ. சிவசுப்பிரமணியம்


**Singapore Communication**

Father's Day Madness

- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12noon - 1p.m) Free
- Refer a friend & Receive a Free Gift
- Add.Day time min 0.30cts only
- Ask.$50/M - U/L Incoming call

**Free Phone & $30.00 Plan***

- **Call waiting, Conference Calling & Voice Mail Free**

**Pl.Call: Sathi /Ashma**

**Store: 416.740.5292 Cell: 416.717.6302**

5010 Steeles Ave., W., Unit 17ABC - Kipling & Steeles



## சிவாகம கிரியா பீடம்

**(416) 724-7480**

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

**சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

**416.267.8221**



**Insurance & Financial Services**

**Balan Kanapathi (Agent)**

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL. London Life

**•416.321.1515 •905.294.2429**

**4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)**



**VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ONT. M1B 5P9, CANADA**
**TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com**

# அறிவும் ஆக்கமும்

104

விஜய குலத்துங்கம்




இப்போது அதிகமானோரின் கவனம் உலகக் கோப்பைக்கான கால்பந்து போட்டி நிகழ்ச்சியின் மீது திரும்பியுள்ளது. 2002 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பைக்கான கால்பந்து போட்டி நிகழ்ச்சிகளின் ஒரு பகுதி ஜப்பானிலும், மறுபகுதி தென்கொரியாவிலும் நடை பெறுகின்றன. ஜப்பான், தென்கொரியா நாடுகளில் மாத்திரமல்ல, ஆசியாவிலேயே முதன்முறையாக இந்தப் போட்டிகள் நடை பெறுவதால், பெருந்தொகையான இரசிகர்களை உள்ளடக்கக் கூடியதாக பல புதிய விளையாட்டு அரங்குகள் இந்த நாடுகளில் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றுள் இப்போது பலராலும் வியந்து பார்க்கப்படுவது, ஜப்பான் நாட்டில் உள்ள 'சப்பறோ - Sapporo என்ற நகரில் அமைக்கப்பட்டுள்ள HIROBA என அழைக்கப்படும் புதியதொரு stadium அல்லது விளையாட்டு அரங்கு ஆகும். இந்த அரங்கத்தில் ஜேர்மனிக்கும், சவூதி அரேபியா விற்கும் இடையில் நடைபெற்ற போட்டியும் இத்தாலிக்கும் ஈகுவடோருக்குமிடையே நடந்த போட்டியும் இந்த 'ஹிரோபா' விளையாட் டரங்கில் நடைபெற்றது.

இப்போது இந்த விளையாட்டரங்கில் என்ன புதுமை உள்ளதெனப் பார்ப்போம். இந்த விளையாட்டரங்கில், கால்பந்துப் போட்டிகள் நடந்த போது அதைப் பார்த்தவர்கள் அவதானித்து இருப்பார்கள் அந்த விளையாட் டரங்கின் தரையில் நிஜமான மிகவும் செழிப்பான புற்றரை இருப்பதை. ஆனால் அந்த விளையாட் டரங்கானது ஒரு நிரந்தரமான மூடப்பட்ட ஒரு முட்டை வடிவ அரங்காகும். அதனுள் சூரிய வெளிச்சம் உள்ளே வருவதற்கு எந்த வழியும் இல்லை. அப்படி இருக்கும் போது எப்படி இந்த செழிப்பான புற்றரை உள்ளது என்ற கேள்வி எழுகின்றது. ஆனால் இந்த முழுத் தரையுமே இந்த விளையாட்டரங்கிற்கு வெளியே வைத்து, சூரிய ஒளியில் நன்கு பேணப்பட்டு வளர்க்கப் பட்டு, உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும் போது உள்ளே கொண்டு வரப்படுகின்றது என்பதே மிகவும் ஆச்சரியப்பட வேண்டிய விடயம். ஒரு உதைபந்தாட்ட மைதானம் என்பது எவ்வளவு பெரியது என்பது எல்லோரும் அறிந்த விடயம். அந்த மைதானம் முழுவதுமே ஒரே துண்டாக வைக்கப்பட்டு அப்படியே முழுமையாக நகர்த்தப்பட்டு உள்ளேயும் வெளியேயும் நகர்த்தப்படுகின்றது என்பது ஜப்பானியர்களின் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு அவர்களது கடின உழைப்புக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

சாதாரண நாட்களில் இந்த புல்தரை வெளியே வைக்கப்பட்டு பேணப்படும் விளையாட்டரங்கின் உள்ளே செந்நிறப் புற்தரை விரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். ஆனால் கால்பந்தாட்டாப் போட்டி, புற்றரையில் இடம்பெற வேண்டும் என்பதால், அந்த வேளையில் உள்ளே பேஸ்போல் விளையாட்டுப் போட்டி களுக்கான செயற்கைப் புற்றரை சுருட்டப்பட்டு ஒதுக்கப்படும். பின்னர் வெளியில் இருந்து இந்த நிஜமான புற்றரை உள்ளே கொண்டுவரப்படும். இந்த பெரிய தரை அசைவதும் ஒரு விசித்திரமாகும். கீழே சக்கரங்களோ அல்லது வேறு அமைப்புகளோ பொருத்தப்பட்டு மெத்தை வாகனம் எப்படி நகர்கின்றதோ அதைப் போல் நன்கு அழுத்தப்பட்ட compressed air காற்றினால் ஒரு வாயு மெத்தை உருவாக்கப்பட்டு, அதில் மிதந்தபடி அசைந்துதான் இந்தப் புல் தரை விளையாட்டரங்கினுள் அசைந்த செல்லும்.

மூடப்பட்ட நிலையில் இருக்கும் விளையாட் டரங்கின் ஒரு பகுதியின் 90 மீற்றர் அகலமுள்ள சுவரானது அசைந்து இந்தப் புற்றரை உள்ளே நுழைய வழிவிடுகின்றது. இதே நேரத்தில் உள்ளே மைதானத்தைச் சுற்றி அமைந்துள்ள ஆசனங்களின் வரிசைகளும் இந்த இடத்தில் அப்படியே பக்கமாக அசைந்து, புற்றரை உள்ளே வந்து தனது இடத்தை அடைந்தவுடன் இருக்கைகள் பழையபடி தமது இடத்திற்கு அசைந்து வரும். வெளிச்சுவரும் மூடிக் கொள்கின்றது. இந்த விளையாட்டரங்கில் 42,000 மக்கள் அமர்ந்து பார்க்கக்கூடியதாக அமைக்கப் பட்டுள்ளது. அத்துடன் 1700 வாகன தரிப்பிடங்களும் உள்ளன. இந்த விளையாட் டரங்கு சென்ற வருடம் ஜுன் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. உலகத்திலேயே இப்படியான அமைப்பு இது ஒன்றுதான் எனக் கூறப்படு கின்றது.

இந்த 'HIROBA' எனப்படும் விளையாட்டரங்கு அமைந்துள்ளது SAPPORD என்னும் நகரில் ஆகும். ஜப்பான் தேசம் நான்கு பெரிய தீவுகளால் ஆக்கப்பட்டது. இதில் வடக்குப் புறமாக அமைந்துள்ள HOKKAIDO என்னும் தீவாக உள்ள பெரும் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆகப் பெரிதான நகரம் Sapporo ஆகும். முன்னர் Hokkaido விற்கு விமான மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ தான் போக்குவரத்து நடைபெற்றது. ஆனால் 1988ஆம் ஆண்டு பிரதான நிலப்பரப்பிற்கும் Hokkaido விற்குமான தரைவழிப்பாதை, கடலுக்குக் கீழான சுரங்கம் ஒன்றின் மூலம் கட்டி முடிக்கப்பட்டது. பிரான்சுக்கும், இங்கிலாந்தி ற்கும் இடையேயான கடலுக்கு கீழான சுரங்கம்



கட்டுவது முதலில் ஆரம்பிக்கப்பட்டாலும், முதலில் கட்டி முடித்த பெருமை ஜப்பானியர்களுக்கே சேரும். இதை 'SEIKAN' சுரங்கம் என அழைப்பார்கள். மொத்தம் 53.85 கிலோமீற்றர் நீளமான இந்த சுரங்கத்தின் அரைப் பகுதி தூரம் கடலுக்கு கீழேயுள்ள தரையின் கீழாக அமைக்கப்பட்ட சுரங்காமக உள்ளது. இந்த சுரங்கத்தினூடாக கடுகதி இரயில் போக்குவரத்து 25 நிமிடங்களில் நடைபெறுகின்றது.

Sapporo நகரின் கட்டிடங்களிலும் பொது இடங்களிலும் கண்ணைப் பறிக்கும் நியோன் வர்ண விளக்குகளால் அமைக்கப்பட்ட பாரிய விளம்பர அமைப்புக்கள் காணப்படும். பல ஜப்பானிய நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு தமது வர்த்தகங்களின் விளம்பரங் களை பாரிய Neon விளக்குகள் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. இந்த விளம்பர விளக்குகள் உலகப் பிரசித்தி பெற்றன. இதை விட winter காலத்தில், நகரத்தின் நடுப்பகுதியில், நகர வீதிகளிலும் சுற்றுப் புற இடங்களிலும் விழும் snow வை சேகரித்து, அங்கு கொண்டு வந்து நிரப்பி, snow இனால் பிரமாண்டமான real size கட்டிடங்களின் மாதிரிகளை அமைத்து, அவற்றை வர்ண விளக்குகளால் அலங்கரிக்கும் 'snow festival' என்ற விழாவைக் கண்டுகளிக்க உலகின் பல பகுதிகளில் இருந்தும் பல இலட்சக்கணக்கான சுற்றுலாப் பிரயாணிகள் அங்கு போபவர்கள். இப்படிப் பல புதுமையான விடயங்கள் நிறைந்த Sapporoவை வாழ்நாளில் ஒரு தடவையாவது பார்க்கவேண்டும்.

• • • • • •

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற





**Vitaplex**

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99

Applicable Taxes Extra

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாக எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றது.



**திருமண சேவை**



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

416 261-6219

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME



**NTE AUTO**

**New Trade Engineering INC.**



ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Condition Service & Repair**



என். ரி. இ. ஓட்டோ இங்க்

CONTACT: SIVABALAN - (416) 750-1573

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCAR.

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


# இசையரங்கம் இனிய தாகம்

இசைக்கு ஏது எல்லை என்று அதன் எல்லையை வரையறுத்துக் கூறமுடியாத எண்ணப்பாங்கை உளத்தே கொண்டுள்ள இசையரங்க அமைப்பாளர் தம் எண்ணத்தை இரசிகப்பெருமக்கள் உளத்தில் இருத்தும் வண்ணம் செய்து காட்டியமை வியப்புக் குரியதே. இயல் இசை நாடகம் எனப் பகுத்துப் பார்க்கும் இன்பத் தமிழின் மணம் பரவ தெவிட்டும் தெள்ளமுதாம் பாமாலை புனைந்தேற்றியது கலையரங்கம். கலை வடிவங்களுக்குத்தான் எத்தனை பாங்கு. எத்தனை உயர்வு, எத்தனை உணர்வு எத்துணை சிறப்பு என்பதனைக் காட்டி நின்றது இசையரங்கம். கலைத்திறன்கள் கைவரப்பெற்றவர்கள் இலைமறை காயாக அன்றி அது எல்லோருக்கும் பயன் தரும் [illegible]சமாக மலரவேண்டும் எனும் [illegible]க்கிலே அமைந்தது இந்த இசை அரங்கம். இசை என்பது எல்லையற்றது என்பது இசையரங்கத்தைக் காணவைக்கும் காரணகர்த்தா திருவாளர் சொர்ண லிங்கத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையும் செயலுமாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (9.6.02) பிற்பகல் அஸ்ரன்பீ மண்டபத்தில் இடம் பெற்ற இசையரங்கில் இசைமழை பொழிந்தவர்கள் கலைத்திறமை கைவரப் பெற்றவர்கள். முன்னணிக் கலைஞர்களாகத் திகழும் வர்ண ராமேஸ்வரன், கௌரிசங்கர், பயஸ் யவாகீர், ஜெயதேவன், நாவலன், யசோதன், கிரிஷாந், ராஜு ராகவன், கிரிஷாந்தன் போன்றோர் இணைந்து வழங்கிய இன்னிசைக் கச்சேரி கேட்டோரைப் பரவசத்தில் ஆழ்த்தியது எனின் மிகையாகாது.

**தொகுத்துத் தருபவர்**
**- த. சிவபாலு, எம். ஏ.**

மும்பாய் கலைஞர் பண்டிட் கார்த்திக் குமாரின் மாணவரான ராஜு ராகவன் [illegible]களின் சித்தார் இசைக்கச்சேரியும் இ[illegible]ற்கு லயமதுரா கலைக்கூட அதிபரும் மிருதங்க வித்துவானுமாகிய கௌரிசங்கர் பாலச்சந்திரன் அவர்களின் மிருதங்க நாதமும் புகழ் பெற்ற வயலின் வித்துவான் ஜெயதேவன் அவர்களின வயலின் இசையும், சித்தார் வாத்தியமும் அல்லது ஜவாகீரின் கீபோட்டும் ஒன்று சேர்ந்து மெருகூட்டுவதாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து வர்ணராமேஸ்வரன் அவர்களின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. புதுவை இரத்தின துரையின் மூன்று பாடல்களையும், கலைவாணி இராஜ குமாரனின் மூன்று பாடல்களையும் சேரனின் ஒரு பாடலையும் மெல்லிசையாகவும் சுரங் களைச் சேர்த்து கர்நாடக இசையோடும் பாடிபார்வையாளர்களைப் பரவசப்படுத்தினார். ஜவாகீர், ஜெயதேவன், கௌரிசங்கர், நாவலன், கஜெயன் ஆகியோர் இணை வாத்தியங்களை இசைத்தனர். இன்பம் பொங்கும் தமிழ்பாடல்கள் அதுவும் ஈழத்தவர்களின் பாடல்களை இசை அமைத்துப் பாடியமை தமிழர்களால் பாராட்டப்படவேண்டியதே.

இடையே இசையரங்கத்தின் நோக்கத்தையும் அதன் தேவையையும் முன்வைத்து திரு. சொர்ணலிங்கம் அவர்கள் சிறிது விளக்கம் அளித்துப் பேசினார். ஈற்றில் திரு. சொர் ணலிங்கம் அவர்கள் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். அவர் தனது நன்றி யுரையில் இவையல்ல, பெருந் தொகையான இரசிகர்கள் இசையரங்கத்தைக் காண வரும் போதுதான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டு வருகை தந்தவர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரியப் படுத்திக் கொண்டார். கவிதைகள் எழுதிய சேரன், திருமதி. கலைவாணி இராஜகுமாரன் ஆகியோருக்கும் பணப்பொதிகள் கொடுத்துக் கௌரவிக்கப் பட்டமைபாராட்டப்பட வேண்டியதே. வெறுமனே பொன்னாடை போர்த்தியோ அன்றி மாலையிட்டோ வாழ்த்தாமல் வெகுமதி கொடுத்து வாழ்த்தியமை பண்டைய தமிழ் அரசர்களின் ஊக்குவிப்பை நினைவில் கொண்டு வருகின்றது. திரு. சொர்ணலிங்கம் அவர்கள் வெகுமதி வழங்கிக் கௌரவித்தமையை ஏனைய நிகழ்வுகளை மேற்கொள்வோரும் பின் பற்றுதல் சாலச் சிறந்ததே.

* நடுத்தர மக்கள் தினமும் வாழைப்பழம் சாப்பிடுவதால் தான் வயிற்றில் இயற்கையாகப் புற்று நோய் வராமல் தடுக்க முடிகிறது என்று அமெரிக்காவின் லூசியானா பல்கலைக்கழகமும் கண்டுபிடித்துள்ளது.


* நுரையீரல் புற்று நோய் இருக்குமோ என்றி சந்தேகம் ஏற்பட்டால் நெஞ்சுச் சளியை மூன்று நாட்கள் சோதிக்கின்றனர். சளியில் பெப்ஸ்டன் என்ற இரசாயனத் திரவத்தைக் கலக்குகின்றனர். இதில் உள்ள செல்கள் அவற்றைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன. செல்களில் மாற்றம் ஏற்படுகிறது. இது புற்றுநோய் என்று அடையாளம் காட்டுகின்றது. பிராங்ஸ் கோப் என்ற கருவி மூலம் சோதனை செய்கின்றனர். இதன் மூலம் நுரையீரல் நோயை அறிந்து கொள்ள முடியும்.



ACTION HONDA

புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service





Call me Now!! 416-704-1179

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough






# உலக தமிழோசை

கடந்த சித்திரைப் புத்தாண்டில் வெளிவந்த உலக தமிழோசை காலாண்டு சஞ்சிகை உலகாளாவிய ரீதியில் தமிழர் வாழும் நாடுகளில் தமிழர் கைகளில் தவழ்வது பெருமைக்குரிய விடயம். அடுத்த சஞ்சிகைக்கான கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் போன்றவற்றை பலர் அனுப்பியுள்ளனர். நீங்களும் உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய தொலை நகல்: 416-282-4978
மின் அஞ்சல்: info@ulakathamiloszai.com

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



குழந்தைகளை வாரி அணைப்பதும், அவர்களைப் பராமரிப்பதும், தாய்மாரும் அதிகமாக பெண்களாகவும் இருப்பது பொது வழக்கு. ஆனாலும் ஆண்கள் கூட இவ் விடயத்தில் முற்றிலும் பூச்சியமானவர்கள் என்று இல்லை. இந்நிலையில் ஓர் இளம் மாணவன் ஒருவர் தனது மார்போடு ஒரு குழந்தையினை அணைத்தபடி பாடசாலைக்குச் சென்றது வியக்கக் கூடிய விடயமாக என் கண்ணில் பட்டபோது அம்மாணவரை அணுகி இது பற்றி பேச முனைந்தேன். என்ன ஆச்சரியம்! அது ஒரு செயற்கையான பொம்மை என்பதும், அது ஒரு முழுமையான கல்வியியல் சம்பந்தமான விடயம் என்பதனையும் அப்போதுதான் அறிந்தேன்.

## சர்மா (சரவணபவ சர்மா)

பொம்மைக் குழந்தையுடன் அம்மாணவனது படத்தினையும் இம்முறை எமது கல்விப் பகுதியில் சேர்ப்பதுடன் இப்பாடம் சம்பந்தமான நல்ல பல கருத்துக்களையும் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். தரம் 11இல் பயிலும் செல்வன். பரராஜசிங்கம் நிவாசன் எனும் இம்மாணவன் இரண்டாம் தவணையில் பயிலும் இப்பாடம் "பெற்றோர் பராமரிப்பு" ("Parenting") என்னும் கற்கை நெறியாகும்.


மாணவர்கள், முக்கியமாக இப்பாடத்தின் மூலம் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையிலான உறவு முறைகளையும், கடமைகளையும் விரிவாகக் கற்கின்றனர். மிகவும் நுட்பமாக பராமரிப்பினைப் பற்றியே அதிகம் கற்கின்றனர். குழந்தைகளை வளர்த்துவரும் காலங்களில் ஏற்படும் அனைத்து சிரமங்கள், அது தொடர்பாக அவற்றுக்கான நடவடிக்கைகள் எவையெவை என்பது பற்றியும் இவர்கள் இப்பாடத்தின் மூலம் பயில்கின்றனர். இப்பாடத்தில் பல்வேறு வகைப்பட்ட திரைப்படங்கள், கலந்துரை யாடல்கள் என்பனவும் குழந்தைகள் சார்பாக நடத்தப்படுகிறது. இப்பாடத்தின் மூலமும் மாணவர்கள் சக பாடங்கள் போன்று வீட்டு வேலை, பரீட்சைகள் என்பனவற்றை மேற் கொள்வதோடு முழுமையான ஒரு (credit) புள்ளியினையும் இலகுவாக பெற்றுக் கொள்கிறார்கள்.

வெறுமனே இப்பாடம் வகுப்பறையுடன் மாத்திரம் இல்லாமல் பயிற்சி முறையிலும் கூட ஒரு சுவையான பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட முறையில் ஒரு குழந்தையினை அதாவது பயிற்சி ரீதியில் வழங்கப்படும் அக்குறிப்பிட்ட மொம்மைக் குழந்தையும், அதனைப் பராமரிப்பதும் இச் சுவையான பகுதியாகின்றது.

மாணவர்கள் குழந்தையினைப் பெற்றெடுக்கும் போது கவனிக்க வேண்டிய அத்தனை கடமைக-ளையும் கவனிக்கப்படுவதோடு அக்குழந்தைக்கு பெயரிடுவது முதற்கொண்டு பிறப்பு சாட்சிப் பத்திரம் பதிவு செய்வது வரை இக் கவனிப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி உணவு, உடை, வைத்தியம் என்பன போன்ற முக்கிய கருமங்களிலும் இவர்களுக்கு போதிய அறிவு கிடைக்கிறது. பயிற்சி முறைக்காக வழங்கப்படும் செயற்கைக் குழந்தையானது உண்பதும், கழிவுகள் அகற்றுவதுமான செயற்பாடு அற்றது. ஆனால் இவ்வாறான குணாதிசயங்களான பசி, கழிவு போக்கல், (சிறுநீர், மலம்) தூக்கம் என்ற அசௌகரியத் தன்மைகளுக்காகவும் இச்செயற்கைக் குழந்தை யும் இயற்கையான குழந்தைகள் அழ நேரிடும் அத்தனை சம்பவங்களுக்கும் அழ ஆரம்பித்து விடும். இவ்வாறு அழும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இம்மாணவர் தொடர்ச்சியாக 48 மணி நேரங்கள் இதனை பராமரிப்பதுவே இவர்களது கடமையாகிறது.

குழந்தையின் இருப்புநிலை - அதாவது உட்கார வைத்தல், சரித்துவைத்தல், கிடையாக படுக்க வைத்தல் போன்ற ஒவ்வாத நிலைகளில் இக்குழந்தையினை இருக்க வைக்கையில் இது உடனே அழ ஆரம்பித்துவிடும். இது பேன்று அரவணைப்பு தேவையான போதும் அழ ஆரம்பிக்கிறது. மேலும் தூங்க வேண்டிய நேரத்திக்கும் மிகவும் கடின முறையில் கையாளும் போதும் கூட இது அமைதியாக இருந்து விடாது அழுதபடியே தனது கவனிப்பை கேட்டு வாங்கியபடியே இருக்கும். மாணவர் களது கையில் கழற்றிவிடாதபடி ஒரு சாவி ஒன்று பொருத்தப்படும். இச் சாவி மூலமே மாணவர்கள் அழுகின்ற குழந்தையினை நிறுத்த முடியும். தொடர்ச்சியாக 48 மணிநேரம் இவர்களுடனேதான் இக்குழந்தை இருக்கிறதா என்று உறுதிப்படுத்த இச் சாவி இவர்களது கையில் பொருத்தப்படுகிறது. இதனால் இக்குழந்தையினை மற்றவர்கள் பராமரிப்பது சாத்தியம் இல்லாமல் போகிறது.

ஒரு குழந்தைக்கு எவ்வளவு நேரம் ஒரு பெற்றோரின் அரவணைப்பு தேவையோ அதே அளவு நேரத்தை இம்மாணவர்கள் இதனுடன் செலவு செய்துதான் ஆகவேண்டும். இக்குழந் தையினை ஈரத்துணியினால் துடைத்து துப்பரவு கூட செய்யலாம். இக்குழந்தையினை அடிப்பது, வேறு வகையில் துன்புறுத்துவது, திட்டுவது போன்ற காரியங்களுக்கு இது அழ ஆரம்பித்து விடும். இவ்வாறு எல்லா நடவடிக்கைகளையும் தனக்குள் இருக்கும் சிறிய கருவி ஒன்றில் பதிவு செய்து, இதனை ஒப்படைக்கும் பட்சத்தில் அனைத்து விளக்கங்களையும் இது ஒப்பிவித்து விடுவதே இப்பாடத்தின் புள்ளியினை தீர்மானி க்கும் பங்காகிறது. ஆகவே இக்குழந்தையினை அழவிடாதபடி மாணவர்கள் தூக்கிவைத்து தகுந்த ஆதரவு கொடுப்பது முக்கிய கடைமை யாகிறது. வேறு மாணவர்கள் இந்த குழந்தை யினைப் பார்த்து சீண்ட வரும் வேளையிலும், தாக்க முயலும் வேளையிலும் தகுந்த பெற்றோராகவே இருந்து இக்குழந்தையினை இம்மாணவர்கள் பராமரிப்பது பார்க்க வேடிக்கையாகவே இருந்தது. முற்று முழுமையாக எப்படிப்பட்ட பெற்றோராக நீங்கள் இருக்கிறீர்கள் என்பது பல்வேறு வகையான முறையில் இவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படுகிறது.



* குழந்தையின் தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இக் குழந்தையின் தேவைகள் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளதா இல்லையா? என்பது

* இக்குழந்தை வன்செயலுக்குள் உட்பட்டுள்ளதா இல்லையா?
* தூய்மையாக பராமரிக்கப்பட்டதா இல்லையா?
* தகுந்த முறையில் தூக்கி அணைக்கப்பட்டதா இல்லையா?
* கை தவறி கீழே விழுந்துள்ளதா இல்லையா?

என்று ஒட்டுமொத்தமாக உயிருள்ள குழந்தை போன்று அத்தனை பராமரிப்பும் இக்குழந்தைக்கு தேவைப்படுகிறது. எனவே ஒரு பரந்த பார்வையில் இப்பாடத்தினை நோக்குகையில்; மாணவர்கள் இதன் மூலம் கடமை உணர்ச்சி யினையும், பொறுப்புக்களையும் வாழ்க்கைக்கு உகந்த சில கண்ணியங்களையும் தமக்குள் ஏற்படுத்துவதோடு ஒரு சிறந்த அனுபவத்தயையும் இவர்கள் பெறுகின்றனர். வேடிக்கையான முறையில் இப்பாடம் இருப்பினும், மாணவர்கள் இதன் மூலம் ஒரு நல்ல அறிவினைப் பெறுகின்றனர் என்பது உண்மையே.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளிடம் கடமை, கண்ணியம், பொறுப்புணர்வு போன்ற தன்மைகளை அதிகம் வளர்க்க அம் மாணவர்களை பெற்றோர் இப்பாடத்தினை எடுக்க ஊக்கிவிப்பது அவர்களது மன நிலைக்கும் ஏன் வாழ்க்கைக்கும் ஓர் சிறந்த படிப்பினை இது உருவாக்கும் என்று நம்புகிறேன்.

குறிப்பு: மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எமது கல்வித் தகவல் பகுதியில், தரம் எட்டில் (Gr. 8) இவ்வருடம் சிறப்புச் சான்றிதல்கள் (Best award) பெறும் மாணவர்களைக் கௌரவிக்க எண்ணுகிறோம். எனவே இவ்வாறு சிறப்புச் சான்றிதல்கள் பெறும் மாணவர்களின் பெற்றோ ரை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக எம்முடன் தொடர்பு கொள்ளவேண்டுகிறோம். இவை பற்றிய மேலதிக உங்கள் கருத்துக் களையும், வினாக்களையும் பதிவு செய்ய வேண்டிய தொலைபேசி: 416.2828059
தொலைநகல்: 416.282.4978


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.

**SISTER FATIMA**

Spiritual Psychic Advisor
Palm Card, Crystal Ball, Psychicreadings, Also Holistic Healer And Adcisor
God gifted healer with the power strength, and knowledge to help you overcome all your problems such as:
* Love * Health * Marriage / Divorce * Separation
* Bad Luck, Evill influence *Infertility * Lucky day & Numbers
* House Blessings * Removing Black Magic

**SATISFACTION GUARANTEED**
**416-264-5836 (Eglintion & Markham Area, Scar.)**

**EDUCATION FUND SERICES Inc.**

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.



Siva Kanapathypillai
(Divisional Director)

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

**416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044**
**Fax: 416-438-8532 Res: 905-472-1139**
**1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.**

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**




**ரூபன்**
.... கண்ணே....உன் காதில் தூங்கும் சிமிக்கி பாரமா....
அழகிய.... மூக்கில் ஜொலிக்கும் மூக்குத்தி....பாரமாக
நீளக் கழுத்தில் உள்ள சங்கிலி அட்டியல்.... பாரமா
மெல்லிடையுள்ள.... ஒட்டியாணம் பாரமா....
துள்ளிக் குதித்தோடும் காலில் ஒலி எழுப்பும் வெள்ளிக் கொலுசு பாரமா

**உலகர்**
ஒண்டும் பாரமில்லையெண்டா போட்டுக் கொண்டு திரியலாம்தானே
ஏன்.... எல்லாத்தையும் கொண்டு போர் னுஅனக லொக்கருக்கை வைக்கிற நீங்கள்

கலகலப்பு தீசனின் கந்தர் கதிர்காமத்தம்பி உலகநாதன்.... மேடைநாடகத்திலிருந்து

# விண்வெளி

103 கனி



**அந்நியர்கள் - Aliens**

ஏலியன்களின் சமாச்சாரங்களிலேயே மிகவும் [illegible]யமானதும் பரபரப்பானதுமான சம்பவம் [illegible]WELL - "றொஸ்வெல்" சம்பவமாகும். இந்த றொஸ்வெல் விவகாரத்தின் பின்னரேயே அமெரிக்கா தனது விண்வெளிப் பயணங் களிலும், விண்வெளி ஆய்வுகளிலும் குறிப்பி டத்தக்க அளவில் வெற்றி பெறத் தொடங்கியது என்பதும் உண்மையாகும். இது காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போன்ற கதையோ தெரியவில்லை. ஆயினும் சந்தேகப்படுவர்களது கூற்றும் உண்மைபோலவே தோற்றுகிறது. சரி! இனி இந்த "றொஸ்வெல்" விவகாரத்தைப் பற்றிப் பார்ப்போம்.

றொஸ்வெல் என்பது அமெரிக்காவின் ரெக்ராஸ் பகுதியை அடுத்துள்ள குன்றுப் பகுதியாகும். அவ்வளவு பிரபல்யம் இல்லாத - ஏன் பெரும்பகுதி அமெரிக்கர்களுக்குக் கூடப் பரீட்சயம் இல்லாத இப்பகுதி - இப்பெயர் 1947ஆம் ஆண்டின் கோடை காலப் பகுதியின் பின்னர் உலகின் பல பாகங்களுக்கும் தெரிந்த பெயராகிவிட்டது. இன்று ufo என்று சொன்னவுடனேயே முனையின் ஒரு பகுதியில் "றொஸ்வெல்" என்ற சொல் பளிச்சிட்டுக் கொண்டு இருக்கும் எனலாம் 1947ஆம் ஆண்டின் யூலைமாத நடுப்பகுதியில் றொஸ்வெல் பகுதியின் வான்பரப்பில் பலத்த சத்தத்துடன் பெரிய தீப்பிளம்பு தோன்றி பூமியின் [illegible]ல் வந்து விழுந்தது. நள்ளிரவில் நடந்த [illegible]ச் சம்பவம் அப்பகுதியில் வாழ்ந்த எல்லா மக்களையும் விழிப்படையச் செய்ததுடன் அம்மக்கள் எல்லோருமே இதனைக் கண்டிருக்கின்றார்கள். மனித நடமாட்டம் குறைந்த இந்த மலைப் பகுதியில் மறுநாட் காலை சிலர் ஏராளமான உலோகச் சிதறல்களைக் கண்டிருக்கின்றார்கள். William Brazel என்பவர் இந்த சிதறல்கள் பற்றிப் பத்தரிகைகள் வானொலி என்பவற்றிற்கும் கூடக் கூறியிருக்கின்றார். செய்தி றொஸ்வெல் பகுதி மக்களுக்கு எட்டி, அப்பகுதி மக்கள் மலைக் குன்றுப் பகுதியிற்கு விரைந்து செல்லத் தொடங்கினர். அவர்கள் அப்பகுதியை அடையு முன்னர்....

பெருமளவு அமெரிக்க இராணுவத்தினர் அப்பகுதிக்கு விரைந்து வந்துவிட்டனர். அப்பிரதேசம் முழுவதையுமே சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கு சிதறிக் கிடந்த எல்லாப் பொருட்களையுமே எடுத்துக் கொண்டனர். மேலும் எவரையுமே அப் பகுதியுள் அனுமதிக்கவும் இல்லை, அப்பகுதியினுள் ஏற்கனவே வந்திருந்தவர்களிடம் இருந்து எல்லாப் பொருட்களையுமே பறிமுதல் செய்தனர். றொஸ்வெல் குன்றுப் பகுதி முழுவதுமே தடுக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு விஷேட இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டது. மேலும் "றொஸ்வெல்" கிராமப் பகுதியில் வாழ்ந்த அத்தனை பேரதும் வீடுகளும் இராணுவத்தால் சோதனை செய்யப்பட்டு வித்தியாசமான பொருட்கள் உலோகங்கள் என்பவை இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டது. இவை எல்லாம் மிகவிரைவாக - 24 மணி நேரத்துள் நடந்து முடிந்து விட்டன. மிகவும் அப்பாவிகளான, விபரம் ஏதும் புரியாத றொஸ்வெல் பகுதி மக்களுக்கு என்ன நடந்தது? என்ன நடக்கிறது என்று தெரியுமுன்னரேயே சகலதும் நடந்து முடிந்துவிட்டது. மேலும் யாருமே இதுபற்றி யாருக்கும் கூறக் கூடாது! மீறிக் கூறினால் உயிராபத்துக் கூட ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டனர். இந்நிலையில் மேயர் ஜெசி மாசல் (Major Jesse Marcel) என்பவர் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்தார். அதன்படி, அந்த விடயத்தின் சிதறல்கள் எல்லாம் "பறக்கும் தட்டு ஒன்றில் உடைந்த பாகங்கள்" எனக் கூறினார். சில மணிநேரங்களின் பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டு அவை எல்லாம் காலநிலை அறியும் பலூன் ஒன்றின் துண்டுகள் என்றும் அன்று இரவு நடந்த விபத்து காலநிலை அறியும் பலூன் வெடித்ததில் ஏற்பட்டது என்றும் புதிய அறிக்கை ஒன்றைக் கூறினார். தனது முதல் அறிக்கை பிழையானது என்றும் கூறிக் கொண்டார்.

முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை ஏன் மேயர் ஜெசி மார்சர் வெளியிட்டார்? றொஸ்வெல் பகுதி மக்களின் வீடுகளை ஏன் சல்லடை போட்டுத் தேடுதல் செய்யப்பட்டது? ஏன் இச் சம்பவம் பற்றிக் கதைக்கக் கூடாது எனப் பயமுறுத்தப்பட்டார்கள்? இது போன்ற பல கேள்விகள் அமெரிக்கர்களிடம் எழ ufo ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்தனர். அவர்கள் வந்து சேர்ந்த நேரம் றொஸ்வெல் மலைக்குன்றுப் பகுதி மிகத் துப்பரவாக இருந்தது. அப்பகுதி மக்கள் எல்லோருமே இவ்விடயம்பற்றி வாய்மூடி மௌனிகளாக இருந்தனர். மனம் தளராது ufologistகள் துருவித் துருவி ஆராயத் தொடங்கினர். பல கஷ்டங்களின் பின்னர் அவர்கள் தமது அபிப்பிராயங்களை, முடிவுகளை கூறினார்கள்.

### ஒரு வரிச் செய்திகள்

* விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற பெண் நாயின் பெயர் - லைகா
* உலகிலேயே எந்தவொரு நாட்டுடனும் போரிடாத நாடு சுவிற்சலாந்து.
* உலகிலேயே அதிகம் வருமான வரி செலுத்துபவர்கள் நோர்வே நாட்டு மக்கள்.

- மோகனதாஸ் சிவஞானம்


**J.A.B. TRAVELS & TOURS**

*Top Sales Award for Cathy pacific*

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்

J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ONT.

(905) 896-8320

**SAFETY TRUCKS**

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

**We Accept Welfare & Unemployment Insurance**




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*

* *365 (Learning Permit)*
* *Lock Books*
* *Air Brake (Z)*
* *Dangerous Goods*
* *Border Crossing*
* *Defensive Driving Course*

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

**Truck Driving** போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, Ont.

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
• ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

S.K.THEESAN

எஸ்.கே.தீசன்

www.kalakalappu.n

கலகலப்பு தீசன்

416-490-9199

# அன்புத் தமிழ்



## சீதா கல்யாணம்

மிதிலையர் கோமான் சனகர் மகா சூரர். எல்லா வித்தைகளையும் நன்றாகக் கற்றவர். பெரிய ஞானி. யாக பூமியில் கலப்பைக் கொழு முகத்தில் சீதையை மகளாகப் பெற்று, பிள்ளையில்லாக் குறைபோக்கிய தவச்செல்வர். தசரதச் சக்கரவர்த்தியின் பெருமதிப்பைப் பெற்றவர். அந்த மகானுக்கு ஒரு பெரிய மனக் கவலை. அவரது மகளுக்கு இன்னமும் நல்லவரன் கிடைக்கவில்லை. பல மன்னர் அவளை மணம் புரிவதற்கு முன்வந்தனர். ஆயினும் அவர்களில் எவருமே தெய்வீகப் பெண்ணான சீதாபிராட்டிக்கு ஏற்றவராக இருக்கவில்லை.

அதனால் மகளுக்குச் சுயம்வரம் மூலம் தகுந்த வரனைத் தெரிவு செய்யத் திட்டம் இட்டார். சுயம்வர நிபந்தனை இதுதான்: 'எனக்கு வருண தேவர் பரிசாகத் தந்த உருத்திர வில்லை எந்த அரசகுமாரன் வளைத்து நாண் ஏற்றுகின்றானோ அவனுக்குச் சீதை மனைவியாவாள்'. பல அரச குமாரர் ஆவலோடு முயன்றும் இதுவரை எவரும் வில்லை வளைத்தாரில்லை.

விசுவாமித்திரர் சனகரின் வேள்வியின் பொருட்டு இராம, இலக்குமணர் சகிதம் மிதிலைக்கு வந்திருக்கின்றார். அவர் மூலம் இராமனது வில்லாற்றலை அறிந்த சனகர் இராமன்



உருத்திர வில்லை வளைத்து நாண் ஏற்றினால் துயர் தீரும் என்றார். விசுவாமித்திரர் யாவும் அறிந்த முனிவரல்லவா? அவர் மிதிலைக்கு வந்ததற்கு இராமன் சனகரது வில்லை வளைக்க வேண்டும் என்பதும் ஒரு காரணம். ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. யானையை ஒத்த மேனியர், மலையெனத் திரண்ட மேனியர் அறுபதினாயிரர் குன்றை ஒத்த வரிசிலையை அவைக்குக் கொண்டுவந்தார்கள். வில்லினைக் கண்ட வேந்தர்கள் விதிர்விதிர்ப் பெய்தினர். வில்லின் வரலாற்றையும் பெருமையையும் சபைக்கு எடுத்த உரைத்த சதானந்த முனிவர்

அன்றுமுதல் இன்றளவும் ஆரும் இந்தச் சிலையருகு
சென்றுமிலர் போய் ஒளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமும் இலை என்றிருந்தோம் இவன் ஏற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம் பழுதாகா(து)....

(கார்முகப் படலம்)

என்று முடித்தார். விசுவாமித்திரர் முகக் குறிப்பால் அனுமதி வழங்க அண்ணல் எழுந்தான். மங்கையர் மயங்கி, நல்லோர் வாழ்த்த, உம்பர் உவப்ப, சிங்கம், விடை, மேரு, யானை இவையெல்லாம் நாணும்படியாக நடந்தான். எல்லோரும் ஆவலோடு இமை கொட்டாது....

தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.

(கார்முகில் படலம்)

இமைகொட்டாது இருந்துமென்ன? இராமன் வில் வளைத்த, நாண் ஏற்றிய கடுப்பு - வேகம் இருக்கிறதே, அதே மிகமிக.... அந்தக் கணப் பொழுதில் சபையோர் எதையும் சரியாகப் பார்க கவில்லை. எடுத்ததைக் கண்டனர்; அவ்வளவுதான், பின்னர் வில் ஒடிந்த ஓசையை மட்டுமே கேட்க முடிந்தது. இராமன் நாணை மட்டும் ஏற்றவில்லை. வில்லையும் அன்றோ ஒடித்துவிட்டான். விண்ணவர் பூமழை சொரிந்தனர். மேகம் பொன் மழை பொழிந்தது. மிதிலை மக்களின் உவகை கரைபுரண்டது. 'புயல் இவன் மேனி' என்பார். 'மானிடன் அல்லன்' என்பார். காதல் வயப்பட்டிருந்த சீதாபிராட்டியின் உள்ளம் உருகிக் கரைந்தது.

களிபேருவகை அடைந்த சனகர் தசரத மன்னருக்குச் செய்தி அனுப்பினார். ஓலையைப் படித்த தசரதர் தோள்கள் மலையென வளர்ந்தன. அயோத்தி எழுச்சி பெற்றது. தசரத மன்னர் பரிவாரங்களுடனும் பெருஞ் செல்வத்துடனும் மிதிலைக்கு வந்துவிட்டார்.

சனகர் எல்லோரையும் முறைப்படி வரவேற்றுத் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றார். திருமண மண்டபம் பொன்மலை போன்று காட்சி அளிக்கின்றது. தம்பியர் சகிதம் கருணை உருவம் போன்ற இராமன் மண்டபத்துள் வருகின்றான். சீதையும் 'அலை கடல் பிறந்து பின்னை அவனியில் தோன்றி, மீள மலையிடை உதிக்கின்றாள் போல்' மண மண்டபத்தை அடைகின்றாள். மணத் தவிசில் இராமனும் சீதையும் 'ஒன்றிய போகமும் போகமும்' போல் இருக்கின்றனர். வசிட்டர் திருமணச் சடங்கை நடத்துகின்றார்.

சனகர் 'பூமகளும் பொருளும் என நீ என் மா மகளொடு பொருந்தி' வாழ்கெனச் சீதையின் மெல்லிதழ் போன்ற கைகளை இராமனின் தடக்கையில் வைக்கின்றார். வாழ்த்தொலிகள் தொடர்கின்றன. மணமக்கள் தீவலம் வந்து, அம்மி மிதித்து அருந்ததி காணும் காட்சியுடன் திருமணச் சடங்கு நிறைவேறுகின்றது.

**கவிஞர். வி. கந்தவனம்**

வால்மீகி இராமாயணத்தில் சனகர் தமது தவமகளை இராமனிடம் ஒப்படக்கையில்

இயம்ஸிதா மம ஸீதா ஸஹதர்மசரீ தவ
ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிமா க்ருண்ணீஷ்வ பாணீநா
பதிவ்ரதா மஹா பாகா சாயா இவானுகதா ஸ்தா

(இராமாயணம் - ராஜாஜி)

என்று கூறியதாக வருகின்றது. 'மகனே, இதோ என் மகள் சீதை. நீ செல்லும் தரும நெறியில் இவள் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக் கொள்வாய். கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப் போல் உன்னைப் பற்றி நிற்பாள். ஒருபோதும் விட்டுப் பிரியமாட்டாள். மங்கலம் ஆகுக' என்பது இதன் பொருள்.

இத் திருவார்த்தைகள் வடநாட்டுத் திருமண வைபவங்களில் மணமகளைத் தாரைவார்த்துக் கொடுக்கையில் மந்திரமாக இன்றும் ஓதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### வியக்க வைக்கும் அதிசய உண்மைகள்

1. உலகிலேயே மிகவும் தட்டையாக அமைந்துள்ள நாடு எது?
இந்தியப் பெருங்கடலில் உள்ள மாலைதீவு.


2. நடக்கத் தெரிந்த பறக்கும் பூச்சி எது? வெட்டுக்கிளி. - திருமதி. R. பாலேந்திரா


**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**

* Venetian Blinds
* Vertical Blinds
* Roller Shades
* Pleated Shades
* Cellular Shades



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

**FREE ESTIMATE**

விபரங்களுக்கு:
என். செல்வம்
**416.332.8482**
**416.419.9247**
**905.201.7733**

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.


### கனடிய, தமிழ் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிப்பு

www.cinebug.com ஆதரவில் மேபிள் கொம்பயின்ஸ் அன் டயனமிக் புரொடக்சன் இணைந்து வழங்கும் ஸ்ரார் நயிற்றில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.


மேற்படி கலை, இலக்கிய ஆர்வலர்களை கௌரவிப்பதற்கான பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களை யூன் 30ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும். 416.615.4646


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

(416) 267-0408


### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 131



**இடமிருந்து - வலம்**

1. அரவக் கொடியோன்
3. தங்கு
5. இருள் (வல - இட)
6. ஒரு சுற்று (வல - இட)
7. சூரியன் (வல - இட)
8. இலங்கையில் சீமெந்து தொழிற்சாலை உள்ள இடம்.
9. பரீட்சை (வல - இட)
11. எக்காலமும்

**மேலிருந்து - கீழ்**

1. அறுசுவையில் ஒன்று
2. தொடர் வண்டி ஓட இத் தேவை
4. எண்ணெய் விளக்கு எரிய உதவுவது (கீழ் - மேல்)
6. சூட்டினால் பொரியச் செய்
9. தானியம் ஒன்று
10. உடலில் உள்ள மச்சம்
11. உரம் (கீழ் - மேல்)
12. அறிவொளி கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ல் | லா | ங் | கு | ழ | ல் | |
| ள | | | | க | | | |
| கா | ண் | டீ | ப | ன் | | ண் | பூ |
| ங் | | | | | ப | | ந் |
| கி | ழி | | ம் | ர | தி | த் | தோ |
| த | | | ம | தி | ல் | | ட் |
| ம் | | தி | ரு | | | | ட |
| | ச | ல | த | ர | ங் | க | ம் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JUNE 25, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**130இல் வெற்றி பெற்றோர்**
1) Mrs. B. M. Rita, Toronto, Ont.
2) L. Thavaluxmy, Donmils Ont.



* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459
253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai




தமிழ் பத்திரிகை உலகில் பல சினிமா சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன, வந்து கொண்டிருக்கின்றன. சிறுவனாக இருந்த கால ங்களில் "பேசும் படம்", "பொம்மை" என்ற இரு இதழ்களும் பின்னர் "சினிமா எக்ஸ்பிரஸ்", "ஜெமினி சினிமா", "பிலிமாலயா" எனத் தொடர்ந்தது. இன்று பல இதழ்கள் சினித் திரை, நியூ பிலிமாலயா, சினி ருடே எனத் தொடருகிறது. இதைவிட ஒவ்வொரு நடிகர் பெயரிலும் கூடப் பத்திரிகைகள் வெளி வருகின்றன. ரஜினிகாந்த், எம். ஜி. ஆர். சிவாஜி, கமலஹாசன், விஜயகாந்த் போன்றோர் சில எடுத்துக்காட்டுகள்.

இ[illegible] பின்வரும் பொது அம்சங்களைக் [illegible]ண்டிருக்கும்.

1. புதிய திரைப்படங்களை அறி முகப்படுத்தல்
2. நடிக, நடிகையர் படங்கள்
3. குறிப்பாக நடிக, நடிகையர் மற்றும் இயக்குனர் பேட்டிகள்.
4. கிசு கிசு எனப்படும் நடிக, நடிகையரின் தனிப்பட்ட வாழ்க்கை விபரங்கள்
5. கவர்ச்சிப்படங்கள்
6. கேள்வி - பதில்

இவற்றையும் மீறி, பேசும் படத்தில் திரைப் படங்களின் திரைக்கதை வசனம் வெளி வந்தது. அதே போல் சினிமா எக்ஸ்பிரஸ். பல நல்ல கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக கேயார், முக்தா சீனிவாசன் போன்றோர் தொடர்கட்டுரைகள், பழைய திரைப்படங்கள், திரைப்படக் கலைஞர்களது விபரங்கள்.

எனவே இந்தப் பத்திரிகைகள் தங்களது விற்பனைக்காக பெரும் பகுதியை நடிக, நடிகையரின் விளம்பரங்களுக்காக செலவு செய்தது. இதன் மூலம் மக்கள் மத்தியில் ஒரு கனவுலகத்தை ஸ்தாபித்தன. இதன் தொடர் இப்பொழுது இணையத் தளங்களாகத் தொடருகின்றன.

உ[illegible] அரங்கிலோ, இந்திய அரங்கிலோ வெளிவந்த நல்ல திரைப்படங்களைப் பற்றியோ, மாற்றுத் திரைப்பட வடிங்களைப் பற்றியோ கவலை கொள்ளவில்லை. இந்தியாவில் நடைபெற்ற திரைப்பட விழாக்களைக் கூட எட்டிப் பார்க்கவில்லை. இது தமிழ்த் திரை உலகிலும், இலக்கிய உலகிலும் ஒரு சாபக் கேடாக அமைந்தது.

இதனை மாற்றுவதற்காக நல்ல திரைப் படங்களை அறிமுகப் படுத்து வதற்காகவும் சில சினிமா சஞ்சிகைகள் வெளிந்தன. அவற்றுள் எனது நினைவில் நிற்பவை அகல்விழி, சலனம், நிழல் போன்றவை. முதல் இரண்டும் இப்பொழுது வெளிவருவதில்லை. நிழல் தொடர்ந்து வெளிவருகின்றது. இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்த சலனம் - பல திரைப்படக் கல்லூரி விரிவுரையாளர்களை ஆசிரியர்களாகக் கொண்டது. குறிப்பாக அம்சன்குமார், சிவகுமார், ஹரிகரன், அருண்மொழி போன்றோர். இவர்களில் அருண்மொழி சில நல்ல திரைப்படங்களை மற்றும் குறும்படங்களை இயக்கியவர். அம்சன்குமார் - பாரதி பற்றிய விவரணப் படத்தை இயக்கியவர். இன்று தமிழ்த் திரைஉலகில் உள்ள சிறந்த சினிமா விமர்சகர்.

சலனம் - லெனினில் இருந்து சத்யஜித்ரே வரை பல சினிமா இயக்குனர்களை அறி முகப் படுத்தியது. பல மாற்று சினிமா வடிவங்களை அறிமுகப்படுத்தியது. தமிழ்த் திரைப்படம் பற்றிய விமர்சனத்தை முன்வைத்தது. சார்ளிசப்ளின் போன்றோரை எடுத்துரைத்தது. தமிழ் இலக்கிய உலகிற்கு மிகவும் சிறப்பான, தரமான சஞ்சிகையாக இது விளங்கியது. என்னைப் பொறுத்தவரை வெளிவந்த 20 இதழ்களும் தமிழ் திரை உலகின் பொக்கிஷங்கள். இவற்றின் பிரதிகளை கனடாவில் காலம் செல்வத்திடம் பெற்றுக் கொள்ளலாம்.

இதனைத் தொடர்ந்து இதன் தொடர்ச்சியாக "நிழல்" தொடருகிறது. பல கனமான சினிமா கட்டுரைகளுடன் பல வித்தியாசமான சினிமா விமர்சனங்களும் இடம் பெறுகின்றன. தாமரைச் செல்வி பதிப்பகத்தின் திருநாவுக்கரசால் வெளியிடப்படும் இச் சஞ்சிகை அனைத்து வாசகர்களையும் சென்றடையக் கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விட்டல்ராவின் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. இதன் ஆசிரியர்களாக தி.க. சதாசிவம், மா. அருண்மொழி, அமரந்தா போன்றோர் கடமை புரிகின்றனர். நவீன சினிமாவிற்கு இது களம் அமைக்கும் என்பது உறுதி. இதழ் 5 "கொமாபீம்" என்னும் ஆந்திரத் திரைப்படம் பற்றிய கட்டுரை சிறப்புமிக்கது.

தமிழ்த் திரை உலகிற்கு இன்று மிகவும் அவசியமான திரைப்படத்தைப் புரிந்து கொள்ளல், அதன் மொழி வடிவத்தை உரிய முறையில் கையாளல், புதிய வடிவமொன்றிற்கான முன்மாதிரி அமைத்தல் போன்றவற்றிற்கு இச்சஞ்சிகை அத்திவாரமிடும். தேடல் மிக்கவர்கள் அனைவரும் இச் சஞ்சிகையை வாசிக்க வேண்டும்.

இதழ் ஐந்தில் இடம் பெற்ற சில விடயங்கள்

* மும்பே (Mumbay) - சர்வதேச திரைப்பட விழா
* அகழ்வாராய்ச்சியில் எழும் புழுதிப் படலம் - தி. பாஸ்கரன்
* கோமாபீம் - ஆந்திரப்படம்
* உலகசினிமா முன்னோடிகள் - ஜெயாயெல் மெனியஸ்
* ஏ.கே. செட்டியார் - மகாத்மாகாந்தி பற்றிய முதல் விவரணப் படம் எடுக்கப்பட்ட துயரங்கள்.
* துப்பறியும் திரைப்படங்கள் - விட்டல் ராவ்.
* திரை விமர்சனம் - சாந்தினி பார், அழகி.

சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ள
நிழல், 31/48 ராணி அண்ணாநகர்
சென்னை 600 078
இச்சஞ்சிகையைக் "காலம்" செல்வம் -416-291-6971 அல்லது முருகன் புத்தகசாலை 416-285-9118 ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

காற்றுவெளி சஞ்சிகை ஆதரவில்

## "ஈழத்து நூல்களின் கண்காட்சி 2002"

(ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும்)

இடம்: Trinity Community Center Hall
East Aveneu, East Ham, London E12
(Eastham Tube Station அருகில்)
காலம்: 28 செப்ரெம்பர் 2002, சனிக்கிழமை மாலை 2 மணி முதல் 8 மணிவரை
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம் நண்பர்கட்கும் தெரியப்படுத்துங்கள்.

தொடர்புகளுக்கு: R. மகேந்திரன்
34 Redriffe Road, Plaistow, London E13 0JX
TEl: 020.8586. 7783


UNITED PERSONAL INJURY ASSOCIATES

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு $1000.00 வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES

The Car Accident People

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

உங்களுக்குத் தெரியுமா?

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் $172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்"* (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)


தீபன் - 416-505-9804

* 5255 Yonge Street, Suite 200, North York
* 257 Dundas Street E., Unit 1, Mississauga
* 29 King Street E., Unit 7, Kitchener
* 75 Collier St., Unit A, Barrie
* 507-251 Bank Street, Ottawa
* 195 Main St. East, 1st Floor, Hamilton



YOGA CLASSES

For Natural Cure Health & Peace of Mind



Raji (Ellango) "Yoga Bhooshna"
(Certified Yoga Instructor)

(416) 743-8173

Fax: (416) 743-8392
78 Riverdale Dr., Etobicoke Ont. M9V 2T7



கலைமகள் புத்தக நிலையம்

துரித பணமாற்றுச் சேவை

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

| SCARBOROUGH | SCARBOROUGH | DOWNTOWN |
|---|---|---|
| 3238 Eglinton Ave., E. | 3850 FINCH AVE. E. . GO | 594 PARLIAMENT ST. |
| Scarborough, Ont. | 1A SCARBOROUGH,ONT. | TORONTO, ONT. |
| (416) 265-3605 | (416) 292-9319 | (416) 921-5018 |

விளையாட்டுத் தகவல்கள் - 101

# 17 உலககிண்ணம் - யாருக்கு உதைபந்தாட்டம்



உலகத்தில் பில்லியன் கணக்கான உதைபந்தாட்ட இரசிகர்களின் இப்போது உள்ள கேள்வி இதுதான். இரசிகர்களை குழப்பும் வகையில் இப்போது நடைபெற்று வரும் உலக கிண்ணப் போட்டிகளும் முடிவுகளும் அமைந்து வருகின்றன. பல இரசிகர்களாலும் விரும்பப்பட்ட பிரான்ஸ் ஆர்ஜென்ரினா, இத்தாலி ஆகிய நடுகளும் இரசிகர்களை போட்டு தலையை பிய்க்க வைத்துள்ளன. கடந்த 4 வருடங்களாக 777 ஆட்டங்கள் ஆடப்பட்டு 2452 கோல்கள் போடப்பட்டு 196 நாடுகளுக்கிடையே ஆடப்பட்ட ஆட்டங்கள் அனைத்தும் இறுதி நிலைக்கு 32 நாடுகளே எஞ்சியுள்ளன. அனேகமாக உலககிண்ண இறுதிப் போட்டிகளில் தோன்றும் Holland, Romania, Scot Land, Yogoslavia போன்ற பிரசித்தி பெற்ற நாடுகள் இம்முறை இறுதிச் சுற்றுக்கு தெரிவுபடாமல் போனமை இரசிகருக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் புதிய நாடுகளான Senegal, Slovenia, China, Ecuador ஆகிய நான்கு நாடுகளும் முதன் முதலாக உலக கிண்ணப் போட்டிகளுக்கு தெரிவாகியமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இதற்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் Senegal நாடு கடந்த World Champion ஆன பிரான்ஸை வெற்றி கொண்டமை உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியமாகும்.

இதுவரை நடந்த இறுதிச் சுற்றுப் போட்டிகளில் Senegal பிரான்ஸை வென்றதும், அமெரிக்கா போர்த்துக்கல்லைவென்றதும், குரோசியா இத்தாலியை வென்றதும், இங்கிலாந்து ஆர்ஜென்ரினாவை வென்றதும் உலக கிண்ணத்தில் பெரும் திருப்பங்களாகும். 1930ஆம் ஆண்டு தொடங்கி இது வரை 16 தடவைகள் நடைபெற்ற போட்டிகளில் வடஅமெரிக்க நாடுகளான பிரேசில் நான்கு தடவைகளும், உருகுவே இரண்டு தடவைகளும், ஆர்ஜென்ரினா ஒரு தடவையும், ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி மூன்று தடவைகளும், இத்தாலி மூன்று தடவைகளும், இங்கிலாந்து ஒரு தடவையும், பிரான்ஸ் ஒரு தடவையும் ஆக மொத்தமாக மூன்று வடஅமெரிக்க நாடுகளும், 4 ஐரோப்பிய நாடுகளுமாக 7 நாடுகளே உலக கிண்ணத்தை வென்று உள்ளன. இது வரை காலமும் எந்தவொரு ஆசிய அல்லது ஆபிரிக்க நாடோ உலககிண்ணத்தை வெல்லவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இம்முறை செனகல், கொரியா, ஜப்பான் போன்ற ஆபிரிக்க, ஆசிய நாடுகள் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதுவரை உலககிண்ண போட்டிகளை வென்ற நாடுகளையும் நடந்த இடங்களையும் பார்ப்போம். 1938 முதல் 1950ஆம் ஆண்டு வரை உலக மகாயுத்தத்தின் காரணமாக போட்டிகள் நடைபெற இல்லையென்பது இங்கு கவனிக்கத் தக்கது.

இங்கே குறிப்பிட்ட பட்டியலை பார்த்தால் பல தடவைகள் உலககிண்ணத்தை நடத்திய நாடுகளே பெருமளவில் வெற்றி பெற்றுள்ளன, ஏனெனில் சொந்த மண்ணில் தங்கள் சொந்த இரசிகர்களின் ஆதரவேயாகும். இந்த உலக கிண்ண போட்டிகளில் கூட கொரியாவும், ஜப்பானும் சிறப்பாக விளையாடி வருவன இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

| ஆண்டு | சம்பியன் | நடந்தஇடம் |
|---|---|---|
| 1930 | உருகுவே | உருகுவே |
| 1934 | இத்தாலி | இத்தாலி |
| 1938 | இத்தாலி | பிரான்ஸ் |
| 1950 | உருகுவே | பிரேசில் |
| 1954 | ஜேர்மனி | சுவிஸ்லாந்து |
| 1958 | பிரேசில் | சுவீடன் |
| 1962 | பிரேசில் | சிலி |
| 1966 | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | பிரேசில் | மெக்சிக்கோ |
| 1974 | ஜேர்மனி | ஜேர்மனி |
| 1978 | ஆர்ஜென்ரீனா | ஆர்ஜென்ரீனா |
| 1982 | இத்தாலி | ஸ்பெயின் |
| 1986 | ஆர்ஜென்ரீனா | மெக்சிக்கோ |
| 1990 | ஜேர்மனி | இத்தாலி |
| 1994 | பிரேசில் | அமெரிக்கா |
| 1998 | பிரான்ஸ் | பிரான்ஸ் |

அடுத்து உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி பிரான்ஸ் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகவில்லை. உலககிண்ணச் சரித்திரத்தில் இதுவே முதல் தடவை கடந்த World Cup (1998) சம்பியன் முதல் சுற்றில் இருந்து தெரிவாகாமையாகும். 1966ஆம் ஆண்டு பிரேசில்க்கும் இதே கதி நடந்தது. ஆனால் பிரேசில் இரண்டாவது சுற்றில்தான் தோல்வியுற்றது. ஆனால் இப்போது பிரான்ஸ் முதல் சுற்றிலேயே தோல்வி அடைந்துள்ளது. இப்போது Group (A) winners ஆக டென்மார்க்கும், runners ஆக Senegal உம் தெரிவாகியுள்ளன.

அடுத்து ஆபிரிக்க நாட்டு உதைபந்தாட்ட king ஆன Camerron அணி அடுத்த சுற்றுக்கு தெரிவாகவில்லை. Cameroon அணி 4 புள்ளிகளை பெற்றிருந்த போதும் Ireland அணி 5 புள்ளிகளைப் பெற்றதால், Group இல் winners ஆக ஜேர்மனியும் runners ஆக Ireland உம் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Klose இது வரை 5 கோல்களைப் போட்டு Golden Boots போட்டியில் உலககிண்ணத்தில் அதிகூடிய கோல்



அடித்தவர்கள் என்ற ரீதியில் முன்னணியில் திகழ்கின்றார். அடுத்து மிக பெரிய அதிர்ச்சி உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு, யாவரும் எதிர் பார்த்திருந்த ஆர்ஜென்ரீனா அடுத்த சுற்றுக்குத் தெரிவாகாமல் தோல்வி கண்டுள்ளது. Group Of Death என்று வர்ணிக்கப்பட்ட மிகவும் கடினமான Group ஆன (f) இல் winners ஆக Sweden இல், runners ஆக இங்கிலாந்தும் தேறியுள்ளன. Group Bஇல் winners ஆக Spain உம், runners ஆக Paraguay உம் தெரிவாகியுள்ளன. அடுத்த சுற்றில் (round - 16) Germany Vs Paraguay, Denmark Vs England, Sweden Vs Senegal, Spain Vs Ireland ஆகிய நாடுகள் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் படி தெரிவாகியுள்ளன. மீண்டும் அடுத்த இதழில் மேலதிக விபரங்களுடன் சந்திப்போம். "நன்றி"

**எஸ். கணேஷ்**

விளம்பரமி பத்திரிகையின் Magic இலக்கம் (3964)
2002 உலக கிண்ணத்தை யார் வெல்லுவார்? என்று விளம்பரம் பத்திரிகையின் கணித முறைக் கணிப்பு.

1. 1994ஆம் ஆண்டு பிறேசில் உலக கிண்ணத்தை வென்றது.
அதற்கு முன் உலககிண்ணத்தை பிறேசில் வென்ற ஆண்டு 1970. 1970ஆம் ஆண்டையும் 1994 ஆம் ஆண்டையும் கூட்டினால் Magic இலக்கம் 3964.

2. 1986ஆம் ஆண்டு ஆஜென்ரீனா உலக கிண்ணத்தை வென்றது. அதற்கு முன்பு உலக கிண்ணத்தை ஆஜன்ரீனா வென்ற ஆண்டு 1978 ஆகும். 1978 ஆம் ஆண்டையும் 1986ஆம் ஆண்டையும் கூட்டினால் Magic இலக்கம் 3964.

3. 1990ஆம் ஆண்டு ஜேர்மனி உலகிண்ணத்தை வென்றது. இதற்கு முன்பு ஜேர்மனி உலககிண்ணத்தை வென்ற ஆண்டு 1974 ஆம் ஆண்டு. 1990ஆம் ஆண்டையும் 1974 ஆம் ஆண்டைக் கூட்டினால் 3964.

4. 1970 ஆம் ஆண்டுக்கு முன்பு பிறேசில் உலக கிண்ணத்தை வென்ற ஆண்டு 1962. ∴ 1962ஆம் ஆண்டையும் 2002ஆம் ஆண்டையும் கூட்டினால் Magic இலக்கம் 3964 ஆகும்.

∴ இந்த ஆண்டு (2002) உலக கிண்ணத்தை பிறேசில் வெல்லலாம் என்பது விளம்பரத்தின் கணிப்பு.


YARLCAN
STEAM CLEANING
* CARPET CLEANING * DUCT CLEANING
உங்கள் சகலவிதமான Cleaning
தேவைகளுக்கும் அழையுங்கள்-
மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709





தமிழர் நிர்வாகத்தில் ஒரு
EMBASSY





விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால்
- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944
5 SAMOSA -
$1.00

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Sacarborough
416-332-8451



# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**



சர்க்கரை வியாதி (Diabetes) குணப்படுத்தும் முறைகள்

நாற்பது வயதை நெருங்கியவர்களுக்கு உடலில் காயம் சிறு புண்கள் ஏற்பட்டு சில நாட்களில் மாறவில்லையென்றால் அதற்காக டாக்டரிடம் போகும் போது அவர்களுக்கு சர்க்கரை நோய் இருக்கக் கூடுமென்று சந்தேகிக்கின்றனர்.

சர்க்கரை நோய் (Diabetes) என்றால் என்ன? அது எப்படி ஏற்படுகிறது? அதற்கு என்ன காரணம்? நாம் உண்ணும் உணவு சீராக சமிபாடு நடந்து அதிலுள்ள சர்க்கரைப் பொருட்கள் சக்தியாக மாறி உடலின் நாடி நரம்புகள் தசைகளுக்கு அனுப்பப்படுகின்றது. சமிபாடு சீராக நடைபெறாதுவிடின் சர்க்கரைப் பொருட்கள் நமக்குக் கிடைப்பதில்லை. அது சிறுநீர் மூலமாக கழிவுப் பொருளுடன் வெளியேறிவிடுகிறது. இதனால் உடலுக்குத் தேவையான சர்க்கரைச் சத்துக்கள் கிடைக்காத-தால் ஆராக்கியம் கெடுகிறது. உடலில் சோர்வு, பலயீனம் ஏற்படுகிறது. அடிபட்ட காயம் புண்கள் குணமாவதில்லை. அடிக்கடி சிறுசிறு கொப்புளங்கள் வந்து தொல்லை கொடுக்கின்றன.

சர்க்கரை நோயை அடியோடு ஒழிக்க ஆங்கில மருத்துவத்தில் இன்னும் ஒரு மருத்துவ முறையும் கண்டுபிடிக்கவில்லை. நோயை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரம் மாத்திரைகளும் இன்சுலின் ஊசி போடும் முறையையும் பின்பற்றுகின்றனர். அத்துடன் உணவுக் கட்டுப்பாடும் செய்கின்றனர்.

சர்க்கரை நோயின் அறிகுறிகளில் முக்கியமானது பலயீனம், உடல் எடை குறைதல் அதிகம், தாகம் எடுத்தல், சிறுநீர்க்கழிவது அதிகமாதல், பசியின்மை ஆகியவை. உடலுக்குத் தேவையான சர்க்கரைச் சத்து கிடைக்காததால் உடலின் தோல் சத்து இல்லாமல் போய்விடுகிறது அதன் காரணமாக தோலில் புண்கள், பல்வித கொப்பளங்கள், அரிப்புகள் ஏற்படுகின்றன. இளம் வயதினருக்கு இந்த நோய் விரைவாக அதிகரிக்கின்றது. சர்க்கரை நோய் பெண்களைவிட ஆண்களையே மிக விரைவாக பிடித்துக் கொள்கிறது. குடும்பத்தில் பரம்பரை நோயாகவும் மாறுகிறது.


இயற்கை மருத்துவத்தில் இந்த நோயை அடியோடு குணமாக்கப் பல வழிகள் கூறப்பட்டுள்ளது. மருந்து ஏதுமின்றி உணவு வகைகளாலேயே கட்டுப்படுத்தலாம். முக்கியமான குறிக்கோள் உணவில் கிடைக்கும் சர்க்கரைப் பொருளை சக்தியாக மாற்றி நாடி நரம்புகளுக்குச் செலுத்தி அவற்றை வலியடையச் செய்வதாகும். இதற்கு உண்ணும் உணவு சீராக சமிபாடு அடைய வேண்டும். இதற்கு பிரத்தியேகமான உணவு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு லீட்டர் சுத்தமான பசுவின் தயிர், பலவிதமான பச்சைக் காய்கறிகள் புளிப்பாக உள்ளவை. தக்காளி, ஆரஞ்சு, சிவப்பு அப்பிள், அன்னாசிப்பழம் ஆகியவற்றை உணவாக உண்ண வேண்டும். ஒன்று இரண்டு ரொட்டி வகைள், சாப்பிடலாம், பருப்புவகை, இனிப்பு சேர்த்து தயாரித்த உணவு வகைகள் சிகிச்சையின் ஆரம்பத்தில் சில நாட்கள் சாப்பிடக் கூடாது.

சர்க்கரை நோயாளிகள் காலை மாலை இரு வேளைகளிலும் நீண்ட தூரம் நடப்பது நல்லது ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்திருக்கக் கூடாது.

மற்றொரு சிகிச்சை முறை - கோதுமை, அரிசி உணவை விலக்க வேண்டும். புளிப்பான பழ வகைகளையும், தயிர் போன்றவற்றைச் சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று கிழமைகள் இதே ஆகாரத்தை மாத்திரம் உண்ண வேண்டும். அதன்பின், பாண் (bread) மட்டும் உணவாகக் கொள்ள வேண்டும். இதனுடன் சேர்த்து நீராவியில் அவித்த காய்கறிகளை உண்ணலாம். அத்துடன் சில உடற்பயிற்சிகளையும் செய்து வரவேண்டும்.

யோக சிகிச்சை முறை

யோகாசனத்தில் "சலவாசனம்" என்ற பயிற்சி முறை உள்ளது. சித்தர்களின் தத்துவப்படி இந்த சர்க்கரை வியாதியை அடியோடு கட்டுப்படுத்த



**சலவாசனம்** (Locust)

இதனிலும் சிறந்த மருந்தோ பயிற்சியோ வேறொன்றுமில்லை. இந்த ஆசனத்தை யோகாசன ஆசிரியரின் துணையுடன் காலை, மாலை ஒரு தடவைக்கு 30 முதல் 60 வினாடிகள் வரை ஒரு வேளைக்கு மூன்று முதல் ஐந்து தடவைகள் செய்து வரவேண்டும். மூன்று வாரங்களின் பின் இதன் பலனை சிறிது சிறிதாக உணர முடியும்.

இத்துடன் சேர்த்து 'நாடிசுத்த" என்னும் சுவாசப் பயிற்சியையும் செய்து வரும் போது முழுப் பலனையும் அடைய முடியும்


**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான
ரெலிவிசன்கள் ரேடியோக்களைக்
குறைந்த செலவிலும், சிறந்த
முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும்
திருத்திக் கொள்ள நாடுங்கள்.



**முருகதாஸ்- 416.26.16883**





# வெளிவந்து விட்டது




உலகத் தமிழோசை கிடைக்கும் இடங்கள்

**ரொறன்ரோ பெரும்பாகம்**

| | |
|---|---|
| • Yarlnagar Traders | 416-285-0587 |
| • Samy & Sons | 416-298-1598 |
| • Best Way | 416-444-8202 |
| • Thuvarakas | 416-757-1095 |
| • Royal Grocery | 416-693-8078 |
| • AVM Varities Stores | 416-285-3347 |
| • ARK Market | 416-421-3429 |
| • Siva Brothers | 416-532-1107 |
| • Ak International | |
| • Kalaimahal Book Deopt | 416-921-5018 |
| • Uthayas SuperMarket | 416-740-7971 |
| • Thomas | |
| • Aruna Market | |
| • Rajee | 416-240-0039 |
| • Shangar International | 416-759-5100 |
| • Serendip | 416-261-2230 |
| • Kumaran Video | 416-264-4254 |
| • Ganesha Spicey Mart | 416-289-2292 |
| • Saravanas Market | 416-439-5727 |
| • Colombo food | |
| • New Spiceland | 416-292-9769 |
| • Greenlands | 416-609-3333 |
| • Daily Needs | 416-490-7703 |
| • Poompugar | 416-499-8386 |
| • SP Importers | 416-261-4737 |
| • Priyas | 905-944-1292 |
| • Yogas | 416-267-0408 |
| • Embassy | 416-332-8451 |
| • Gnanams | 416-750-8118 |
| • Bread Master Bakery | 416-299-5083 |
| • Vallin Super Market | 416-724-5453 |
| • Lourdes | 416-264-1546 |

Montreal
Lingam 1 -514-345-8445

Ottawa
Nanthan 1 614 -823-6667

Vancuvour
•Kumar • Thukkas • Kesavan

USA - Newyork - • Subas

உலகத் தமிழோசை சஞ்சிகையை
விற்பனை
செய்ய விரும்புபவர்கள்
முருகன் புத்தகசாலை (416) 285-9118
விளம்பரம் (416) 282-8059
ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளவும்

# முதலீடு - ஓர் அறிமுகம்

**(Investments an Introduction)**

-விக்னேஷ்

*தொலைத்தகவல் தொடர்புகள் முன்னேறி யிருக்கும் இந்நாளில் தரகர்களின் பங்கு சந்தையில் அவசியமா என்று நீங்கள் நினைக் கலாம். அவருக்குக் கொடுக்கும் 'கமிஷன்' வீண் என்று கூட நினைக்கலாம்.*

*நீங்கள் விற்கவோ, வாங்கவோ நினைக்கும் போது அதற்கேற்ற மற்ற நபரைக் கண்டுபிடிக்க வேண்டும். விற்பவருக்கு ஒழுங்கான முறையில் பணம் கிடைக்க வேண்டும். காசோலை 'சுவற்றில்" எறிந்த பந்தாகத் திரும்பி வரக் கூடாது. அது காசாக மாறி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். விற்பவருக்கு பணம் ஒழுங்காகக் கிடைக்க வேண்டுமே என்று கவலை என்றால் வாங்குபவருக்கோ, மோசடி யில்லாத பங்குப் பத்திரம் (share certificate) போன்றவை கிடைக்க வேண்டுமே என்று கவலை. இவ்வாறு இரு தரப்பினரின் கவலைக-ளையும் போக்கி, விரைவாகவும், சீரிய முறை யிலும் விற்றல் வாங்கல் தருபவர்களே பங்குத் துறை தரகர் ஆவர்.*

*பங்குத் தரகர்கள் பங்கு மற்றும் கடன் பத்திரங்களை வாங்கி இருப்பு (stock) வைத்தி ருந்தும், விற்கலாம் அல்லது விற்பவ ருக்கும் வாங்குபவருக்கும் நேரடிப் பாலமாக இருந்தும் அந்த சமயத்தில் செயல்படலாம்.*

*1987க்கு முன் வரை கனடாவில் நிதித்துறை சேவை அங்கங்கள் நான்கு பிரிவுகள் அல்லது நான்கு தூண்களாக இருந்தன. அவை முறையே.*

* *வங்கிகள் (Banks)*
* *ரஸ்ட் கம்பனிகள் (Trust companies)*
* *இன்சூரன்ஸ் கம்பனிகள் (Insurance cmpanies)*
* *பத்திகத்துறை (Securities industry)*

*1987 வரை அரசு ஒரு துறையில் உள்ள நிறுவனங்கள் மற்ற துறைகளில் புகத் தடை விதித்திருந்தது. பிறகு அவை சிறிதாக சிறதாக விலக்கப்பட்டு விட்டன. இன்றைக்கு கனடாவில் பெரியவங்கிகள் பெருமளவில் பத்திகத் துறையைக் கைக்கொண்டுள்ளன. அவை ஏறத்தாழ பத்திகத்துறையை ஆக்கிரமித்துள்ளன என்று கூடச் சொல்லலாம். வங்கிகள் இலாப நோக்குடன், இந்தத் துறையைக் கைக் கொண்டன.*

*ஒரு கம்பனி முதன்முறையாகப் பங்குகளை வெளியிடும் போது அதை ஆங்கிலத்தில் IPO அதாவது Initial Public Offering என்பர். "ஆரம்பப் பொது விநியோகத்தர்" என்ற தமிழில் கூறலாம். ஆரம்பப் பொதி விநியோகத்தில் பங்குகளை வாங்குவது என்பது பொதுவாக ஆபத்தானது. ஏனென்றால் அந்தக் கம்பனியின் கடந்த காலசரித்திரம் நமக்குப் பொதுவாகத் தெரிவதில்லை. கடந்த காலத்தை வைத்தது எதிர்காலத்தை ஒரளவு கணிக்க முடியும் தானே? அந்த வசதி இந்த ஆரம்ப பொது விநியோகப் பங்குகளில் இருப்பதில்லை, இரண்டாவது சந்தையில் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்கும் போது, நமக்கு அவற்றின் கடந்த கால சரித்திரம் முழுவதுமாகத் தெரியும் அல்லது தெரிந்து கொள்ளவாய்ப்பு உள்ளது.*

பங்குகள் வாங்குவதும் விற்பதும், பங்குத் தொடர்பகத்தின் *(stock exchange)* மூலம் நடைபெறுகிறது பங்கு தொடர்பகம் கட்டிடத்தோடு கூடிய தொடர்பகமாவும் இருக்கலாம், (உதாரணம் றொறன்ரோ பங்குத் தொடர்பகம்) அல்லது இன்டர் நெட் மூலம் இயங்கும் கண்ணுக்குத் தெரியாத வான்வெளித் தொடர்பக மாகவும் இருக்கலாம்.

பெரும்பாலான பங்குச் சந்தை வர்த்தகம், தொடர்பகத்தன் மூலமே நடைபெறுகின்றது. தொடர்பகங்கள் (Exchanges), வர்த்தகத்தை (training) ஒழுங்குபடுத்த விதிமுறைகளை வகுத்துள்ளன.

பெரிய பங்குத் தரகர்களிடம் சில சமயங்களில் ஒரே பங்கை ஒருவர் விற்கக் கோரலாம் மற்றவர் வாங்கக் கோரலாம். உதாரணத்துக்கு X கம்பெனி பங்கு 100ஐ A என்பவர் வாங்க விளைகின்றார். அதே X கம்பெனி பங்கு 100ஐ B என்பவர் விற்க விளைகின்றார். அதே x கம்பெனி பங்கு ஒரே தரகளை அணுகியுள்ளனர் எனவும் கொள்வோம். இத்தகைய நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் Cross Transaction என்பார்கள். இவ்வாறு பங்கு தரகரிடம் பொருந்திய வாங்கும் விற்கும் நடவடிக்கைகளையும் கூட, தொடர்பகத்திற்குத் (Stock Exchange) தெரியப்படுத்தியாக வேண்டும். றொரன்ரோவில் உள்ள பங்குத் தொடர்பகமே கனடாவில் உள்ள மிகப் பெரிய பங்குத் தொடர்பகம் ஆகும்.

இந்தத் தொடர்பகங்களில் மில்லியன் கணக்கில் பங்கு வியாபாராம் தினமும் நடைபெறுகின்றது. இது நியாயமான முறையிலக் நடைபெறுகின்றது என்று தெரிந்தால் தான் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வார்கள். அவ்வாறு முதலீடு செய்யப்பட்டால் தான் நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேறும். இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டு, குறைபாடுகளைத் தவிர்க்கவும், நேர்மையான முறையில் நடைபெறவும் பலவித ஏற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பத்திகத்துறையை பத்திரமாகப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் பத்திகத்துறை நிர்வாகிகள் ஆவார். இவர்களைப் பத்திகத்துறைக்குழு என்றும் கூறுவர்.

ஒரு மாகாணத்தில் ஒரு பங்கு விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதாலேயே அந்த பங்குகள் சிறந்த பங்குகள் ஆகிவிட மாட்டா. மாகாணபங்குத் துறை நிர்வாகிகள், அந்த பங்குகளைப் பற்றிய முழு, உண்மையான, எளிய விவரங்கள் மக்களுக்குத் தெரியப் படுத்தப்படுகின்றனவா என்று மட்டுமெ கவனிக்கிறார்கள். அவ்வாறு இருந்தால் மட்டுமே அவை மாகாணத்தில் விற்பனைக்கு அனுமதிக்கப்படும். அது வாங்குபவருக்கு லாபம் தருமா என்ற முறையில் பங்குத் துறை நிர்வாகிகள் நோக்குவதில்லை. அதே சமயத்தில் பங்குத்துறை நிர்வாகிகள் தவறு செய்பவர்களைத் தண்டிக்கப் போதிய அதிகாரங்களையும் பெற்றவர்களாக இருக் கிறார்கள்.

பங்குச் சந்தையோடு தொடர்புடைய மற்ற சில அமைப்புகளைப் பற்றியும் அவற்றின் பணி பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம்.

## அறிந்திருக்க

* *குளிர்சாதன இயந்திரம் (Air Condition) மனிதர்கள் சொகுசாக இருப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டதல்ல. புடவை தொழிலில் பயன்படுத்துவதற்காகவே குளிர்சாதன இயந்திரம் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அடிக்கடிமாறும் வெப்பநிலை காரணமாக துணிகள் சாயம் மாறாமல் இருக்க குளிர்சாதன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.*

* *டார்மின்கான் எனும் காட்டுக் கோழி முட்டையிட்டவுடன் முட்டையின் நிறம் இரத்த சிவப்பாக இருக்கும். பிறகு வெளிச் சூழல்களுக்கேற்ப சிறிது நேரத்திற்குள் கறுப்பாக மாறிவிடும்.*

* *உலகிலேயே மிகப்பெரிய பூங்கா உட்பர்லோ தேசியப்பூங்கா. இது அல்பேட்டாவில் உள்ளது. இதன் பரப்பளவு 17 ஆயிரத்து 872 சதுர மைல்கள்.*


## Cell Phone Specialist

your connection

**1733 Eglinton Avenue E.**
**Uint 5 Toronto, Ont.**
**M4A 1J8**



## FIDO PLANS

*** NO CONTRACT * NO ACTIVATION FEES**

| Per Month | $30.00 | $45.00 | $45.00 |
|---|---|---|---|
| Day Time | 150 | 300 | 200 |
| Evenings & Weekends | 1000 | 1000 | Unlimited |
| Call Forward | Yes | Yes | Yes |
| Call Waiting | Yes | Yes | Yes |
| Conference Call | Yes | Yes | Yes |
| Voice Mail | Yes | Yes | No |
| Minute Tracker | Yes | Yes | No |
| Call Display | No | No | No |

**Call: Selvi or Naresh**

தமிழில் தொடர்புகளுக்கு அழையுங்கள்: **செல்வி**

**416-285-8800 OR**

**1-866-309-1010**

## FREE PAGING




CityGear Go. Be


**Alpha Numeric Multi Lined Display Window Pagers**

**** NO AIRTIME CHARGES FOR LIFE****

**** FREE VOICE MAIL FOR 1 YEAR***

## ROGERS AT & T WIRELESS

Nokia 3360



$50* on 2 year contract

**$35 PLAN**

175 minutes daytime / mth
Unlimited evening / Weekends

*Free Call Display* *Free Voice Mail*
*Free Call Forwarding*

*** After mail in Rebate**

Ericsson T18



$25* on 2 year Contract

## BELL MOBILITY


NO CREDIT CHECK

SOLO MONTHLY 2MTHS FREE ($35 PLAN)

NO CONTRACT

**100 DAYTIME MINUTES PER MONTH & UNLIMTED EVENINGS AND WEEKENDS**

$169* Audiovox 9100
$40 Mail in Rebate



$199* Mot 120c$
$50 Mail in Rebate



199* Nok 6185
$70 Mail in Rebate



மொன்றியலில் இருந்து அழைத்துப் பதிவு செய்பவர்களுக்கு தொலைபேசி அனுப்பி வைக்கப்படும். எங்களிடம் தொலைபேசிக்குத் தேவையான எல்லா விதமான துணைப் பொருட்களையும் பெற்றுக்கெள்ள முடியும்.

தொலைநகல் இலக்கம்: 416-285-6841

நகைச்சுவைத் தொடர்.... -67

# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்

ஒருவரை.... பிழை பிடிப்பதும்.... அல்லது.... அவர் விட்ட பிழைகளை.... திரித்து.... பெரிதாக்குவதும்.... சிலருக்கு.... பொழுது போக்கு

பிறிம்பிலி.... மீனாக்கா... இளையதம்பியின் பழைய சரித்திரத்தை கிண்டி... கிளறிப் பார்க்கும் அதே வேளை.... தன்னைப் பற்றி.... சிந்திப்பதில்லை.
கண்டறியாத... கனடா சட்டம். எல்லாரும்.... வெல்பெயர்.... வேலை.... தேடாமல் அண்எம்புளோய்மெண்ட்.... குடும்பங்கள்.... பிறிஞ்சு.... இருந்து கொண்டு கண்டறியாத... சிங்கிள் மதர்....



இப்படி....அப்படியெல்லாம்....பிறிம்பிலி மீனாக்கா.... தத்துவம் பேசத் தொடங்கினார். ஆபிரகாம்.... லிங்கன்.... அடிமைத்தனத்தை ஒழிக்க பேசிய பேச்சு போலிருக்கு. நிற வெறிக்கு எதிராக ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி பேசியது போலிருக்கு சிக்காக்கோவில் சுவாமி விவேகானந்தர் பேசியது போலிருக்கு.





பிறிம்பிலி மீனாக்காவின் வாழ்க்கையில் ஒரு மறுபக்கம் சுந்தரத்தார்.... சுவிஸில்....இருக்கிறார். ஆனால் மீனாக்கா.... அளந்த அளப்பு.... சுன்னாகத்திலை.... இருந்து சுவிசுக்கு ராசவள்ளிக்கிழங்கு எக்ஸ் போட் பண்ணுறவர். அவருக்கு வெளிநாடு வர விருப்பமில்லை.... ஒரே நாட்டுப்பற்று
**"பெற்றதாயும் பிறந்த நன்நாடும் நற்றவ வானிலும்.... நனி.... சிறந்ததே"**
என்று கனவிலும்.... முணுமுணுப்பவர் என்று மீனாக்கா.... சுந்தரத்தைப்.... பற்றி சொல்லும் போது....
கணவனே.... கண்கண்ட தெய்வம் படம்.... கண்முன்னே....வரும்....
சுந்தரம் எண்டால் அழகு.... அதுக்கு ஒத்தமாதிரி எனக்கு ஒரு வடிவான மாப்பிளை வாச்சிட்டால் என சுந்தரம் S.S.C எடுக்காமலே S.S.C சோதனை அடையாள அட்டைக்கு ரை கட்டி எடுத்த போட்டோவைக் காட்டி சந்தோசப்படுவா. ஆனால் சுந்தரத்தை.... நன்றாகத் தெரிந்தவர்களுக்குத்தான் அவ்வை...சண்முகி படத்தைவிட திறிலான விடயங்கள் புரியும்....

சீற் பெல்ற் ப்ளீஸ்... சுவிஸிலை.... சுந்தரம் பற்றிக் கேட்ட கவலையில்... அரைகுறைத் தூக்கத்திலிருந்த பிறிம்பிலி.... மீனாக்காவையும்.... தூங்குவது போல நடித்த இளையதம்பியையும்.... பெல்ற் போடும்படி சொன்னார் விமானப் பணிப்பெண்

என்னடா.... இளையாம்பி இன்று பிளேன் வெளிக்கிடேக்கிலேயே.... என சலிக்கவும் அற்றென்சன்ஸ் பிளீஸ்.... வீ.... ஆர்.... றெடி.... ரூ.... ரேக்.... ஓவ்.... என.... அறிவித்தல்.... வந்தது.... வரசித்தியானே.... ஐயப்பனே.... றிச்சமண்ட் விநாயகனே.... கனடா.... கந்தனே.... மதுர மீனாட்சியே....செல்வச்சந்நிதியானே.... கதிரமலைக் கந்தா.... என சர்வதேச ரீதியில் எல்லாத் தெய்வங்களையும் ஒருநிமிடத்தில் உதவிக்கு அழைத்தார்.... பிறிம்பிலி.... மீனாக்கா....





விமானச் சில்லு.... உருளத் தொடங்கியது. ஆனால் எல்ஸ்மெயர் இளையதம்பியின் மனம் பின்னோக்கி உலகர் வீட்டில் இருந்த நாட்களை எண்ணினார். இளையதம்பி அங்கிள் நீங்கள் மரி பண்ணப் போற கேள் என்ன... படிச்சவ.... இப்ப வேக்.... பண்ணுகிறாவோ....? என்று ரூபி.... கேள்வி கேட்டபொழுது மொனிக்கா லிவிங்சி பிரச்சினையில் கிளின்ரன் திணறியது போல.... திணறிவிட்டார் இளையாம்பி.... அவ.... கொம்பியூட்டர் சயன்ஸ் படிச்சவ.... இப்ப....





எறிவெடிகள்.... கைக்குண்டுகள் எறியும் போது அதனை.... ஏந்தி திரும்பவும் எறிந்தவருக்கே.... திருப்பி எறிவதை.... படங்களில் (சிலர் நேரிலும்) கண்டிருப்பர்கள். இளையாம்பி அங்கிள்.... நீங்கள் மரி பண்ணப் போறதை எப்படி.... எனக் கேட்டதுடன் ரூபி....விடவில்லை....

உங்களை மம்மி....டடி.... அல்லது உங்கடை..... சொந்தக்காரர் படிக்கேல்லை.... என்பதற்காக அவயின்றை விருப்பத்துக்கு படிக்காத பிள்ளையை..... மரிபண்ணாதையுங்கோ.... என்றும்.... சிலவேளை....படிச்ச பிள்ளை.... தங்களை மதிக்கமாட்டுது என்றும. சில பேர் நினைப்பினம்.....
வில்லுப் பாட்டுக்கு துணை.... சேர்த்தது போல.... பேரம்பலமும்....ஒத்துப் பாடினார்.... ஓம்.... இளையாம்பி....



## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

### வருடாந்தப் பண்ணிசை, கட்டுரை, வாசிப்பு எழுத்துப் போட்டி - 2002

மேற்படி போட்டிகள் ஜுலை 06, 2002, சனிக்கிழமை காலை நீல்சன் & சுவல்ஸ் சந்திப்பில், 1301 நீல்சன் றோட்டில் அமைந்துள்ள Presbeterian church மண்டபத்தில் இடம்பெறும். இப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர்களின் வாரிசுகள் பங்கு பற்றலாம். விண்ணப்ப முடிவுத் திகதி ஜுலை 03, 2002 புதன்கிழமை நள்ளிரவு 12:00 மணியாகும். விண்ணப்ப முடிவுத் தேதியின் பின் எவ்விண்ணப்பமும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எனவே போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவங்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் கீழ்க்காணும் தொலைபேசி எண்களில் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| திரு. சி. குகதாசன் | 416.609.2001 | கே ரீ. எம். விஜயகுமார் | 647.290.9794 |
| திருமதி. சு. சுப்பிரமணியம் | 416.269.1173 | திருமதி. எஸ். நவரத்தினராசா | 416.439.9293 |
| திரு. வெ. ராஜகுலேந்திரன் | 416.286.9330 | திரு. நா. தெய்வேந்திரன் | 416.298.6139 |
| திருமதி. ஜெயா பரராசிங்கம் | 416.299.5083 | திரு. யோ. தவலிங்கம் | 416.438.4554 |
| செல்வி. பி. மகேந்திரன் | 416.754.4864 | திரு. எஸ். புவனேந்திரன் | 416.418.8586 |


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## 13-06-2002
## அமரர் திருமதி. செல்லையா அமிர்தாம்பிகை



பிறப்பு
ஜனவரி 10, 1938

இறப்பு
மே 13, 2002

மறுவன்புலவை பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கனடாவில் (Scarborough) வசித்து வந்தவருமான திருமதி. செல்லையா அமிர்தாம்பிகை 14-05-2002 Scarborough இல் சிவபதமடைந்தார்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு தொலைபேசி மூலமும், நேரிலும் கலந்து கொண்டோருக்கும், மலர் வளையம் மற்றும் அனைத்து உதவிகளைப் புரிந்தோருக்கும் எங்கள் குடும்பத்தவர்களின் சார்பில் மனம்மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


**கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்**

**விருது பெற்ற**

# VIVEKA PRINTERS

**உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்**



**முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்**

**80 BARBADOS BLVD.,**
**UNIT #4 SCAR., ONT.**

# 416-410-6401

# இன்சூரன்ஸ் (Insurance)



**ஆயுள் காப்புறுதி** *(Life Insurance)*

கடந்த அத்தியாத்தில் ஆயுள் காப்புறுதியின் நோக்கங்கள், மற்றும் இவ் ஆயுள் காப்புறுதியில் சட்டரீதியாக வழங்கப்படும் பாதுகாப்புப் பற்றிக் பார்த்தோம்.

இவ் அத்தியாத்தில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஒருவர் நேர்மையான முறையில் எதுவித ஒழிவு மறைவும் இல்லாமல் சமர்பிக்க வேண்டிய அம்சங்கள் யாது என்பன பற்றி ஆய்வு செய்வோம்.

**(ஆயுள் காப்புறுதி செய்து கொள்பவர் ...ரிடமிருந்து சகல தகவல்களையும் நேரடியாக சந்தித்து ஒவ்வொன்றாக தெளிவாக விளங்கப்படுத்திக் கேட்டு, விண்ணப்ப படிவங்களை நிரப்பும் அதிகாரம் மாகாண அரசின் அனுமதிப் பத்திரம் (லைசென்ஸ்) பெற்ற முகவர் ஒருவருக்கு மட்டுமே உண்டு. காப்புறுதிச் சபையின் லைசென்ஸ் எடுக்காத ஒருவர் எந்த வகையிலும் ஒருவரை நேர் எதிர்கொண்டு தகவல்களை பெற்று விண்ணப்ப படி வங்களைப் பூர்த்தி செய்வது சட்ட விரோத செயலாகக் கருதப்படும்.)**

தகவல்கள் எடுத்து நிரப்பும் விண்ணப் படிவங்களும் அதன் வடிவங்களும் கம்பனி வித்தியாசமாக இருந்தாலும் பெறப்படும் தகவல்கள் யாவும் அடிப்படை ரீதியில் ஒன்றாகவே இருக்கும்.

பின்வரும் தகவல்கள் இங்கு முக்கியமாக வழங்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

1. **ஆயுள் காப்புறுதி செய்து கொள்பவர் பற்றிய விபரங்கள்**
    * பெயர், முகவரி
    * ஆணா அல்லது பெண்ணா என்ற விபரங்கள்
    * பிறந்த திகதி
    * பிறந்த நாடு, மாகாணம்
    * சமூகக் காப்புறுதி இலக்கம்

மேற்குறிப்பிட்ட ஆயுள் காப்புறுதி செய்ய போகின்றவரின் தகவலில் பிறந்த திகதியும் ஆணா அல்லது பெண்ணா என்ற அம்சமும் மாதாந்தம் செலுத்தும் கட்டணத்தின் விலையினை தீர்மானிப்பதில் முக்கிய அம்சங்களாகும்.

கனடாவில் பொதுவாக பெண்களின் ஆயுள் காலம் ஆண்களைவிட அதிகமாக இருப்பதால், பெண்களுக்கு ஆண்களைவிட மாதாந்த கட்டுப்பணம் எப்போதும் சற்றுக் குறைவாகவே இருக்கும்.

அது தவிர பிறந்த திகதி என்பதும் மாதாந்த கட்டுப்பணம் என்பதன் விலையினை நிர்ணயிப்பதில் மிகமிக முக்கியமானதாகும். அதாவது வயது குறைந்தவர்களுக்கு மாதாந்த கட்டுப் பணம் குறைவானதாகவும், வயது கூடிய வர்களுக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க மாதாந்த கட்டுப்பணம் அதிகரித்துக் கொண்டே போகும்.

இங்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்பவர் தனியாகவோ அல்லது கூட்டாகவோ செய்து கொள்ளலாம். அதாவது ...ன் மனைவி பிள்ளைகள் என்ற கூ...னையே இங்கு குறிக்கும். ஒரு முழுக் குடும்பமே ஒரே காப்புறுப் பத்திரத்தில் தங்களுக்குரிய ஆயுள் காப்புறுதிப் பத்தரத்தினைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அப்படியாயின் சகலரின் விபரங்களும் குறிப்பிடல் வேண்டும்.

2. **ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தின் உரிமையாளர்** *(Owner of the Policy)*

பொதுவாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்பவரும் அப்பத்திரத்தின் உரிமை யாளரும் ஒரே நபராகவே இருப்பது வழமை யாகும். இங்கு பத்திரத்தின் உரிமையாளர் என்பது மாதாந்த கட்டுப் பணத்தினை இவ் ஒப்பந்தத்தில் செலுத்துபவரையே குறிக்கும். ஆனால் சில நேரங்களில் தொழில், உழைப்பு எதுவும் இல்லாமல், சமூக உதவிப் பணத்தில் இருப்பவர்கள் காப்புறுதி செய்யும் போது அதற்காக மாதாந்தப் பணம் செலுத்துபவர் இன்னொருவராக இருப்பார்.

3. **நட்டஈடு பெறுபவர் பற்றிய விபரங்கள்** *(primary beneficiary)*

"மரணம்" என ஒன்று நடந்தால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட மாதிரி இந் நட்டஈட்டுத் தொகை ஒருவருக்கு போய்ச் சேர வேண்டும் என்ற விடயம் இங்கு சரியாகக் குறிப்பிட்டு அவருக்கும் காப்புறுதி செய்தவருக்கும் என்ன உறவு முறை எனவும் குறிப்பிடல் வேண்டும்.

இந்நட்டஈட்டுத் தொகையினை பெற்றுக் கொள்ளும் உரித்துடையவரை காப்புறுதி செய்தவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் விரும்பிய படி மாற்றிக் கொள்ளலாம். உயிரோடு இருக்கும் காலத்திலேயே அதற்குரிய விண்ணப்ப படிவங்களை எடுத்துப் பூரணமாக நிரப்பி காப்புறுதி நிறுவனத்திற்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அடிப்படையில் நட்டஈட்டினை தமது மரணத்தின் பின்பு பெற்றுக் கொள்வதற்கு எவருக்கு உரித்துடையவர் என காப்புறுதி செய்து கொள்பவர் குறிப்பிடுகின்றாரோ அவர் மட்டுமே இங்கு தமது அத்தாட்சியினை சமர்பித்து நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்ள முடியும்.

3. **சில நிபந்தனைகள் நிலைமைகள் காரணமாக நட்ட ஈட்டினை பெறுபவர்** *(Contingent beneficiasy)*

இவ் அத்தியாயம் ஒன்றும் ஒப்பந்தம் செய்யும் போதும் வழங்கப்பட வேண்டியதாகும். மேலே குறிப்பிட்ட அடிப்படையில் நட்டஈட்டினை முத -ன்மையாக பெறுபவர் நட்டஈடு கோரும் நேரம் சில நேரங்களில் உயிருடன் இல்லை என்றால் அந்த நேரம் இவ் இரண்டாவதாக குறிப்பிட்ட நபர் நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளும் உரித்துடையவர் ஆவார்.


சிவ பஞ்சலிங்கம், B.Com.
(Licensed Insurance Broker by the Ontario Insurance Commission)
416-321-0999


பொதுவாக குடும்பங்களில் முதல் உரிமையாக கணவனையோ அல்லது மனைவியினையோ குறிப்பிட்டு விட்டு, இத்தகைய வழியில் இரண்டாவதாக பிள்ளைகளை குறிப்பிடுவது வழமையாகும்.

4. **ஒப்பந்தப் பத்திரம் இருக்க வேண்டிய மொழி**

ஆங்கிலம் அல்லது பிரெஞ் மொழியில் நாம் விரும்பிக் குறிப்பிடும் இரு மொழிகளில் ஏதாவது ஒன்றில் ஒப்பந்தப் பத்திரங்களை தயார் செய்து உருவாக்கப்படும்.

5. **இக் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய நபர்**

அதாவது இக்காப்புறுதி செய்த நபரா அல்லது மாதாந்தப் பணம் செலுத்தும் உரிமையாளரா அல்லது வேறு எவராவதா என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

மேற்குறிப்பிட்ட பொதுவான சில தகவல்களுடன் முக்கியமாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஒருவர் வழங்க வேண்டிய காப்புறுதி செய்பவர் பற்றிய ஏனைய சொந்த *(personal information)* என்ற தகவல்களுக்கு அடுத்த கட்டுரையில் தொடர் வோம்.

### விடுகதை

* அருகருகே இருந்தும் இணையமாட்டார்கள் அவர்கள் யார்? தண்டவாளம்
* ஒற்றைக் கண்ணன் ஓடியாடி வேலி அடைப்பதில் கில்லாடி அவன் யார்? தையல்ஊசி
* மண்ணுக்குள் கிடைத்தவன் மங்களம் தருபவன் அவன் யார்? மஞ்சள்


கல்வி புகட்டுவதில் கடந்த பல ஆண்டுகளாகச் சாதனை புரியும்

# வீ.வீ ரியூரறிங்

கணினித் துறையில் காலடி பதிக்கின்றது....

**SuperNetSolution**

இன் கூட்டு முயற்சியில்

**V.V Tutoring Centre** இன்

**Kennedy** வளாகத்தில்

(Kennedy & Eglinton)

**June 15th 2002** வகுப்புகள் ஆரம்பமாகும்



❖ தரம் 3 மாணவர்களுக்கான **Computer Courses**

❖ உயர் வகுப்பு மாணவர்களுக்கான
1. **Beginners & Intermediate Java**
2. **Beginners & Intermediate C++**
3. **Beginners & Intermediate Visual basic**
4. **Web Design + Web Tools**

❖ வேலை தேடுபவர்களுக்கான **Computer** கற்கை நெறிகள்

❖ இன்னும் பல


**V.V Tutoring Centre**
**416.701.1763**
**905.471.9794**

**SuperNetSolution**
**416.269.9851 Or**
**info@supernetsolution.com**


### அறிந்து கொள்ளுங்கள்

* சுதந்திரம் தருபவர் முன் அடங்கி இரு, அடக்குபவர் மீன் சுதந்திரமாய் இரு.
* மனநலம் இன்றி இனநலம் இல்லை, குணநலம் இன்றி வாழ்க்கையே இல்லை.
* பாவம் கொண்டதுதான் நடனம், பாவம் இல்லையெனில நடனம் பாவம் ஆகிவிடும்.
* மறுமணம் என்பது வாழ்க்கையை இழந்தவருக்கே


# யோகா சோதிடம்



❈ கிரகப் பொருத்தம் பார்த்தல்
❈ சுபமுகூர்த்தம் கணித்தல்
❈ சாதகக் குறிப்புக் கணித்தல்
❈ பலன் பார்த்தல்

**416-299-8361**





# பூட்டு? சாவி?

**KEERTH LOGSMITH**

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவிதமான பூட்டு, சாவி சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய இலக்கம்.

**(416) 439-3709**
**Pager: (416) 375-7330**




# மாணவர் பகுதி


S.F. Xavier (ஆசிரியர்)

Answers to Tutorial 102: June 01, 02

Ans. 1. To maximize the value of the expression, we must make the individual fractions as large as possible using this principle
$^6/_1 + ^5/_2 + ^4/_3 = 9\,^5/_6$




Ans. 2. Let the width of rectangle be x and the length 3x.
AB:BC = 5X:3X = 5:3




Ans. 3. Since AD = 10. Radius of each semi circle is 5 cm
$AB.AD = 25\Pi + 100$ $AB = 2.5\Pi + 10$
∴ Shortest distance between the semi circles
$= 2.5 + 10 - 10 = 2.5\Pi$

Ans.4. Each of the negative integers has its opposite included in the sum. Which is equal to zero.
The sum is 52 + 54 + 56 + 162

